# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, ஆவணி 24 உ (9—9—73) ஞாயிறு ஷஃபா:ஆகிர் 11 —புத்தகம் 27 இதழ் 2


# தமிழ் ஈழத்துக்கு தன்னாட்சி!

## இதுவே நம் இனத்துக்கு மீட்சி!

## ஒத்துழையாமை, சட்டமறுப்பில் ஈடுபட்டு ஆயிரக் கணக்கில் சிறை செல்வோம்!

## புதியதலைவர் நாவலர் சூளுரை

"இன்று தமிழ் சமுதாயத்தைப் பீடித்துள்ள தொல்லைகள் தீர்ந்திட ஒரேயொரு வழிதான் உண்டு. பூச்சி புழுக்களாக வாழாது மனிதராக வாழ விரும்பும் எந்த சமுதாயத்துக்கும் ஏற்ற வழி அதுதான். வீரசமுதாயத்துக்கு ஏற்றவழி மாத்திரமல்ல — பூச்சி புழுக்களாக மாறுது வாழ விரும்பும் எந்த சமுதாயத்துக்கும் ஏற்ற வழி அதுதான். தன் கொள்கைக்காக ஒன்றேகால் ஆண்டுகளாக வெலிக்கடைச் சிறையில் வாடும் தமிழ்க் கவிஞன் காசி ஆனந்தன் பாடியது போல் — "ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பது" தான் அந்த வழி. முன் பல்வேறு பாதைகளிற் சென்ற தமிழ்த் தலைவர்கள் எல்லோரும் இன்று ஒன்றுபட்டு தமிழர் கூட்டணி மூலம் காட்டும் வழியும் அதுதான்!

'சிங்கள சமுதாயத்தின் சம்மதத்தோடு எமது உரிமைகளை நிலைநாட்ட முடியாதென்பது தெரிந்து விட்ட பின்பு, ஒரு தனித்தேசிய இனத்தின் மறுக்கமுடியாத உரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தன் பாரம்பரிய தாயகமான தமிழ் ஈழத்தில் தமிழினம் தன் ஆட்சி காண்பதுதான் அந்த வழி."

— இவ்வாறு தமிழரசுக் கட்சியின் 12வது மாநில மாநாட்டில் தலைமையுரை நிகழ்த்தியபோது, கட்சியின் புதிய தலைவர் நாவலர் அமிர்தலிங்கம் முழக்கமிட்டார்.

இந்த இலட்சியத்தையடைய அஹிம்சை அடிப்படையிலான இயக்கத்தை தமிழ் மக்கள் பெருமளவிலும் தொடர்ச்சியாகவும் விடாப்பிடியாகவும் கடைப்பிடிக்கவேண்டுமென்றும் — தமிழ் மக்கள் மத்தியிலுள்ள துரோகிகளை பகிஷ்கரிக்க 'வேண்டுமென்றும் — தெரிவுசெய்யப்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)



தமிழரசு மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் வழக்கறிஞர் அ. குமாரகுரு அவர்கள்

## தமிழகத்துக்கொரு பாரதி தமிழ் ஈழத்துக்கு 'காசி'!


### உணர்ச்சிக்கவிஞனை சிறைவைத்திருப்பது அநீதி, அக்கிரமம், கொடுமை!

### முத்தமிழ்க் காவலர் கோபாவேசம்!

'தமிழ் நாட்டுக்கு ஒரு சுப்பிரமணிய பாரதியென்றால் ஈழநாட்டுக்கு ஒரேயொரு கவிஞன் காசி ஆனந்தன்தான்! அத்தகைய பெருமை வாய்ந்த தமிழ்க் கவிஞன் காசி ஆனந்தனை காரணமின்றியும வழக்கு விசாரணை எதுவும் நடத்தாமலும் 450 நாட்களுக்குமேல் இலங்கை அரசு அவரை சிறையில் அடைத்து வைத்திருப்பது பெரும் அநீதி, அக்கிரமம். இவ்விதமான அக்கிரமங்களைத் தமிழ் நாட்டிலுள்ளவர்கள் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இந்தத் தமிழர்களின் விஷயத்தில் இந்திய அரசு தலையிட்டேயாகவேண்டும். அதற்கு மாநில அரசும் தீவிர கவனம் செலுத்த வேண்டும். அண்டை நாட்டின் தோழமை வேண்டுமென்பதற்காக, அங்குள்ள தமிழர்களுக்குச் செய்யும் தீமைகளைக் கண்டு பாராமுகமாக இருக்க வேண்டுமென்று மத்திய அரசு எண்ணினால் அது அரசின் பலவீனத்தைத்தான் காட்டும். ஆகையினால் அவர்களுக்கு கைகொடுப்பதற்கு நாம் உடனயாகத் தயாராகவேண்டும்.

'இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் இந்திய அரசு தலையிட்டு நடவடிக்கையெடுக்காவிடின், இங்குள்ள தமிழர்கள் இலங்கைக்கு படையெடுக்கவேண்டிய நிலையும் தோன்றி விடலாம். எனக்கு வயது 75. ஆனால் எத்தனைய கட்டுப்பாடுகளையும் மீறி கடலைக்கடந்து செல்வதற்கும் நான் ஆயத்தமாக இருக்கிறேன். அதனால் ஏற்படக்கூடிய எவ்வித விளைவுகளைப் பற்றியும் நான் கவலைப்படவில்லை.'

—இவ்வாறு சென்னை கவிதா ஓட்டலில் 25-8-73ல் கவிச் சக்கரவர்த்தி கண்ணதாசன் அவர்களால் கூட்டப்பட்ட இலங்கைத் தமிழர் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் முழக்கமிட்டார்.



## 'மீண்டும் எரிகிறது இலங்கை'

உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இரா. சனார்த்தனம் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்ட 'மீண்டும் இலங்கை எரிகிறது' எனும் நூல் வெளியீடும், அதே தலைப்பிலான அரசியல் நாடகமும் அண்மையில் சென்னை வாணி மகாலில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையை துலாம்பரமாக விளக்கி எழுதப்பட்ட இந்நூலை முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் வெளியிட்டு வைத்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில்:

## இந்திய அரசின் கவனத்தை திருப்ப அரசு அலுவலகங்கள்முன் மறியல்!

### சென்னையில் இளைஞர் பேரவை ஏற்பாடு!

இலங்கைத்தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு கடைப்பிடித்து வரும் அலட்சியப் போக்கை கண்டித்தும், இப்பிரச்சினையில் இந்திய அரசின் கவனத்தைத் திருப்புவதற்கும் சென்னையிலுள்ள மத்திய அரசு அலுவலகங்களை முன்பு மறியல் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இப்போராட்டத்துக்கு கவிச்சக்கரவர்த்தி கண்ணதாசன் அவர்களே தலைமை தாங்கப் போவதாக அறிவித்துள்ளார்.

உலகத்தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் கவிஞர் கண்ணதாசனுடைய கவிதா ஓட்டலில் 25.8.73ல் கூட்டப்பட்ட 'இலங்கைத் தமிழர்' ஆலோசனைக் கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்துக்கு முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமை தாங்கினார். கூட்டத்துக்கு பல்வேறு கட்சிகளையும் சார்ந்த நூற்றுக்கு மதிகமானோர் வந்திருந்தனர். உலகத்தமிழ் இளைஞர் பேரவைத்தலைவா இரா. ஜனார்த்தனம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

(1) இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் மாநில அரசும், மத்திய அரசும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(2) இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசின் அலட்சியப் போக்கை கண்டிக்கும் வகையில் சென்னையில் உள்ள மத்திய அரசு

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை மாநாடும் காங்கேசன்துறை மாநாடும்

தமிழர் பாசறையின் மாநில மாநாடு இந்த வாரம் காங்கேசன் துறையில் கூடுகிறது. 1956ம் ஆண்டு திருமலையில் கூடிய மகாநாட்டிலும் பார்க்க அதிக முக்கியத்துவம் பெறுகிறது. காங்கேசன் துறை மாநாடு.

திருமலையில் கூடிய மாநாட்டிற்குத் தமிழ்ப் பேசும் மக்கள் தமிழ் ஈழத்தின் நாலா திசைகளிலும் இருந்து பாத யாத்திரையாக வந்து திருமலையில் குழுமினர். ஈழத் தமிழினம் எடுக்க வேண்டிய முடிவை நிர்ணயிப்பதற்காக நாட்டில் இனக்கலவரம் ஏற்படும் நிலை! அன்று வரை மொழிச் சமத்துவம் உறுதி செய்யப்பட்டிருந்த வேளை அது.

அரசுகட்டிலிருந்து அரசோச்சிய தமிழுக்கு நேர்ந்த புறக்கணிப்பு தமிழ் மக்களை ஆர்த்து எழச் செய்தது. வீறுகொண்ட தமிழ் மக்கள் தமக்கு மறுக்கப்பட்ட மொழி உரிமையை மீண்டும் நிலைநாட்டிட அறப்போருக்கு அறை கூவல் விடுக்க அன்று திருமலையில் கூடினர். வரலாற்றுப் புகழ் பொருந்திய திருமலைத் தீர்மானம் அனைத்து உலகும் அறியும் படியாக ஆங்கு விளம்பப்பட்டது. கடலெனத் திரண்டிருந்த 30,000 மக்கள் முன்னிலையில்.

திருமலையில் விளம்பப்பட்ட தீர்மானம் அரசுக்கு ஓர் ஆண்டுகாலக்கெடு விதித்தது. அந்தத் தவணைக்குள் மறுக்கப்பட்ட தமிழ் மக்களது உரிமைகள் மீண்டும் நிலைநாட்டப்படா விட்டால் ஓராண்டு காலம் கடந்ததும் போர்க்கொடி உயர்த்தப்படுமெனப் போர்ப் பிரகடனம் செய்யப்பட்டது திருமலைத் தீர்மானத்தின் மூலம்.

தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு தமிழரசுத் தலைவர்களும், தொண்டர்களும் உறங்கிக்கிடக்கவில்லை. அறப்போராட்டத்துக்கு வேண்டிய ஆயத்தங்களை அவர்கள் முன்னேற்பாடாகத் திட்டமிட ஆரம்பித்தார்கள். தமிழ் ஈழத்தின் பட்டி தொட்டி எங்கும் திருமலைத் தீர்மானத்தின் விளக்கக் கூட்டங்கள் நடைபெற்றன. தொண்டர்கள் சேர்க்கப்பட்டார்கள். தொண்டர்களுக்கு அறவழிப் பயிற்சிகளும் போதனைகளும் நடைபெற்றன. எதிர்வரப் போகும் போராட்டத்தை முன்னிட்டு மறைந்த தலைவர் கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம் ஐயா அவர்கள் தமது சட்டத் தொழிலைத் துறந்தார். முழுக்க முழுக்கத் தம்மை இயக்கப் பணிகளுக்கு அர்ப்பணித்தார்.

காலம்நெருங்கிக்கொண்டு வந்தது. அசமந்தமாக இருந்து வந்த அப்போதய பிரதமர் காலஞ்சென்ற பண்டாரநாயக்கா உண்மையாகவே தமிழர்கள் அறப்போராட்டத்தில் குதிக்கவும் இனத்தின் உரிமைகளை நிலைநாட்டிட இரத்தம் சிந்தவும் களபலி தரவும் தியாகங்களை ஏற்கவும் சித்தம் கொண்டு விட்டார்கள் என்பதை அறிந்து தமது பிரதமர் பதவி பறிபோகப் போகிறதே என்று பயந்தார்.

திருமலையில் பிரித்தானியக் கடற்படையும், கட்டுநாயக்காவில் ரோயல் விமானப் படையும் இருந்த நேரம் அது! இலங்கை நிறைவான சுதந்திரத்தைப் பெறுது டொமினியன் அந்தஸ்தில் இருந்த நேரமும் கூட நாட்டில் இனக் கலவரம் ஏற்பட்டு மலைநாட்டுத் தமிழ் மக்கள் உயிருக்கும், உடமைக்கும் ஊறு ஏற்படாதென உறுதியளிக்க முடியாத நிலை ஏற்பட்டால், தனது நாட்டினத்தவரின் தற்காப்புக்காக இந்தியா தலையிடக்கூடுமோ வென்ற ஐயுறவு ஒரு பக்கம். அப்படி நேர்ந்தால் இலங்

## -ஓர் ஒப்பு நோக்கு

கையை இந்தியா கைப்பற்றுது காப்பாற்றுகிற சாட்டில் இலங்கையில் நிலைகொண்டிருந்த பிரித்தானியப் படைகள் ஆட்சி அதிகாரத்தை பொறுப்பேற்கக் கூடுமென்ற அங்கலாய்ப்பு மறுபுறம்.

மட்டக்களப்பில் மாநாடு கூடுவதற்கான முன்னேற்பாடுகள் தீவிரமாக நடைபெற வாரம்பித்தன. மட்டக்களப்பு மாநாடு திருமலைத் தீர்மானத்தில் உரைக்கப்பட்ட காலக்கெடு கடந்ததும் அடுத்து என்ன? என்ற கேள்விக்குறியோடு நடைபெற விருந்ததால் மாநாட்டின் முடிவு போர்ப் பிரகடனமே என்பதில் யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் இருக்கவில்லை.

மேற்படி சூழ்நிலைகளை, நிலைவரங்களைத் தெரிந்து கொண்ட திரு. பண்டாரநாயக்கா தமிழர் தந்தை திரு. செல்வாவை அழைத்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். பேச்சுவார்த்தைகளும் பிரச்சினைகளது தன்மை காரணமாக ஒரே நாளில் முடிவதாக இருக்கவில்லை. பல தடவைகள் சந்திப்புகள் நேர்ந்தன அடுத்த மாநாடும் குறிப்பிட்ட திகதியில் நடைபெறுவதாகவிருந்தது. எங்கும் ஒரே திகில். அடுத்து நேரப்போவதற்கு தம்மை அர்ப்பணிக்கத் தமிழ் மக்கள் ஆயத்தமாக விருந்த வேளை மட்டுநகரில் மாநாடும் ஆரம்பமாகிவிட்டது. அப்போதுதான் ''பண்டா — செல்வா'' உடன்படிக்கை கைச்சாத்தாகியதாக அனைத்து உலகிற்கும் விளம்பப்பட்டது.

உடன்படிக்கையின் உள்ளடக்கம் வீறுகொண்டு எழுச்சி பெற்றிருந்த இளம் உள்ளங்களுக்கு நிறைவான திருப்தி தருவதாக அமையவில்லை.

ஆகவே, உடன்படிக்கை குறித்து கருத்து வெளியிடுகையில் தந்தை செல்வா, ''இந்த உடன்பாடு வெற்றியும் இல்லைத் தோல்வியும் இல்லை. நாம் செல்லவிருக்கும் பாதையில் கடந்துசெல்லும் ஒரு படிக்கட்டு'' என்று குறிப்பிட்டார்.

பின் நடந்தவை வரலாற்று நிகழ்ச்சிகள். காங்கேசன் துறை மாநாடோ திருமலை மாநாட்டிலும் பிரதானமானது. சந்தடியில் ஆர்ப்பாட்டங்களில் அல்ல! அதன் முக்கியத்துவத்தில்.

அன்று தமிழரசுக் கட்சி தனியொடு கட்சியாக போர்ப்பரணி பாடி நின்றது. இன்றோ ஈழத்தமிழ் தலைவர்கள், தமிழக கட்சிகள், தமிழ் மக்கள் யாவரும் ஓர் அணியில். ஆகவே எமது குரலில் மேலும் வலு ஏறியுள்ளது.

1949ம் ஆண்டிற்குப் பின் "தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா'' என்ற முழக்கம் வான்முட்ட எழுகின்ற நிலை. அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் அமைப்பில் ஒரே குடும்பமாகவிருந்து பிரிந்தவர்கள் மீண்டும் ஒரே மேடையில் கூடிக் குலவுகிறார்கள். கட்சி மாச்சரியங்கள் மறக்கப்பட்டு ஒரு கட்சி மாநாட்டில் மறுகட்சித்தலைவர்களும் கலந்து கொள்ளுகின்றார்கள்.

1961ம் ஆண்டிற்குப் பின் தமிழரசு மாநாட்டில் இ. தொ. காங்கிரஸ் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர் 1958-ம் ஆண்டில் வவுனியா மாநாட்டிலும் தமிழரசு மாநாட்டில் மாநாட்டு மேடையில் பேசாத அடங்காத் தமிழர் முன்னைநாள் வவுனியாப் பா. உ. திரு. சி. சுந்தரலிங்கம் கலந்து கொள்ளுகிறார்.

(7-ம் பக்கம் பார்க்க)

## எங்கள் மகாநாடு

—திருக்கோணமலைக் கவிராயர்—

வீரமறவரெலாம் விடுதலையின் வேட்கையினல்
தீரத்திராவிடராய்த் திரள்கின்ருர், —சோராத
இந்தப் பெரும்படைக்குமெதிர்ப்படைகளிங்குளதோ?
செந்தமிழா! சேர், கார் நம் சீர்.

தூங்காதுழைக்கும் தூய நற்றமிழர்
தொடை நடுங்காத தொண்டரின் பேரூர்
வேங்கையின் வீரம் விளைந்திடும் பூமி
காங்கேசன் துறையில் கவின் மாநாடாம்
தந்தையர் பிறந்த தனிப்பெரும் தொகுதியில்
தரித்திர ஆட்சியும் நடுங்கிடும் பகுதியில்
வந்தனம் கூறி வரவேற்கின்றனர்
வண்டமிழ்ப் பணியைச் சிரமேற்கொண்டோர்—

தளபதி அமிரும் தலைவராய் எழுகிருர்
களமதில் வெற்றியைக் காணவே விளைகிருர்
சிலமதிற்பூனைகள் பல மைல் தொலைவில்...
முழுமதி முகத்தின் பெறுமதி இகழ்ந்தனர்
நக்கலைப் பயின்ற குக்கல்களிடத்தில்,
நற்கலைவாணர்கள் சிக்குதல் நலமோ?
சொற்களால் மட்டும் சுடப்படாதிவர்கள்
பற்களைக் களட்டிப் பதக்கமாயணிவீர்.

சிங்கள ஆட்சியிற் சிக்கிய நரிகள்
எங்களை, எழுச்சியை, இனிய நற்றமிழர்
சங்கையை,—சமரை,—சரியான பாதையை,
தங்கள் தமிழர்கள் பொங்கிய அணியை,
அங்கே இருந்தே அம்மாவின் முன்னே
சிங்களப் பாஷையில் சிறுமையாய்ப் பேசுருர்
சங்கையே அற்ற சரித்திர மடையர்கள்
இங்கொரு நாளில் இழிசனராவரே.

### அவையடக்கம்

தமிழரசுத் தந்தையரே வணக்கம், எங்கள்
தாய்க்குலமே, தமிழ்ப்படையே வணக்கம், எங்கள்
அமுதான தலைவருக்கும் வணக்கம் —இங்கே
அமர்ந்திருக்கும் அறிஞர்கட்கும் வணக்கம், எப்போ
சமரென்று வினவுகின்ற இளைஞர்கட்கும்
சட்டமறுப்பினில் கலக்கும் தியாகிகட்கும்
அமரனடி சேர்ந்த எங்கள் அமரர்கட்கும்
அனைவர்க்கும் என் வணக்கம் உரித்தாகட்டும்.

இந்த மகாநாட்டினிலே எடுக்கப்போகும்
இறுதி முடிவினிப்பாகும், இன்ப ஊற்றும்,
செந்தமிழின் விடுதலையே சகலர் நோக்கம்
சேர்ந்தெழுந்து தருவீர்கள் நீங்களுக்கம்
சந்ததமும் தமிழே நம்முயிராமென்றே
சாற்றிநிற்கும் தமிழ் அரசு அணியில் நின்று
சொந்தநலன் பாராமல் தமிழ் ஈழத்தை
சுதந்திரமாய் உருவாக்கும் சபதம் ஏற்போம்.

வெலிக்கடையுள் வெறியேறும் வேங்கையெல்லாம்
வெளிக் கொணரும்வரை நமக்கு உறக்கம் வேண்டாம்
சலிக்காத போர் நமக்குப் பழக்கம் என்போம்
சரித்திரத்தில் சுந்தணத்தைப் போல் மணப்போம்
மொழிக்காக எதுவரினும் ஏற்று நிற்போம்
முரடரெதிர் கொண்டாலும் எதிர்த்தும் நிற்போம்
பழிக்கட்டும்! பழிக்கட்டும்!! பகைவர் கூட்டம்
பதைபதைத்து எதிர்காலத் தெருப்பார் ஓட்டம்

உடலெதற்கு, உயிரெதற்கு, உழல்வதற்கா?
உலுத்தரின்கீழ் உதைபட்டுப் புதைவதற்கா?
திடமெதற்கு இருக்குதடா —தீரா—இன்றே
திட்டமிட்டுச் சற்றுநட ஒளியைக் காண்பாய்
குடலெடுத்து மாலையிடும் குள்ளரோடு
கூட்டுறவு வைத்தவரைத் திருத்திச் சேர்த்துப்
படைநடத்த நாள் பார்த்துக்கிழம்பு—நாளை
பாதத்தில் வெற்றிமலர் குவியும் கண்டாய்.

## மலையகத்திலிருந்து பெருவாரியான தமிழர்கள்—தமிழரசு மாநாட்டில் கலந்து கொள்ளுகிருர்கள்!

காங்கேசன் துறையில் நடைபெறும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் 12வது மாநில மகாநாட்டிற்கு மலையகத்திலிருந்தும் பெருந்தொகையானவர்கள் கலந்துகொள்கின்றனர். இலங்கைத்தொழிலாளர் கழக அங்கத்தவர்கள், இலங்கை தமிழரசுக்கட்சியின் அங்கத்தவர்கள். ஆதரவாளர்கள், அனுதாபிகள் ஆகியோர்கள் கலந்துகொள்ளக்கூடியவாறுன ஏற்பாடுகளை இலங்கைத்தொழிலாளர் கழகத்தின் உதவிப் பொதுச்செயலாளரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்சபை உறுப்பினருமான திரு. சு. கெங்கரத்தினம் அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

அத்தோடு, மலையகத்தின் இன்றைய நிலையை விளக் [illegible] பாட்டுகள், [illegible] [illegible] ஆகியவையும் செல்வி காத்தவராயன் ஞானமணியின் பரதநாட்டியமும் இடம் பெறுகிறது.

பொகவந்தலாவை, மஸ்கெலியா, அட்டன், பதுளை, பசறை, நுவரெலியா, இராகலை, உடபுசல்லாவ, தலவாக்கொல்லை, அக்கரப்பத்தனை ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்தவர்கள் பெருந்தொகையாக கலந்து கொள்ளுகின்றனர்.

பொகவந்தலாவை, மஸ்கெலியா, அட்டன் ஆகிய மாவட்டத்திலிருந்து செல்லுள்ளோர் இலங்கைத் தொழிலாளர் கழகபொதுப் பிரதிநிதி திரு. எஸ். ஏ. என். ஆபிரகாம் அவர்கள் தலைமையிலும், அக்கரப்பத்தனை, தலவாக்கொல்லை ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்தவர்கள் தலவாக்கொல்லை மாவட்டப்பிரதிநிதி திரு. மு. எல்லாளன் அவர்கள் தலைமையிலும், பதுளை, பசறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் கழகத்தின் இணைப்பொருளாளர் திரு. தங்கவேல் அவர்கள் தலைமையிலும், நுவரெலியா, இராகலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கழக இராகலைப்பிரதிநிதி திரு. ஆறுமுகநாதன் அவர்கள் தலைமையிலும், உடபுசல்லாவ பகுதியைச்சேர்ந்தவர்கள் உடபுசல்லாவ மாவட்டப் பிரதிநிதி திரு. டி. வி. கருப்பையா ஆகியோர் தலைமையிலும் சென்றுள்ளனர்.

## சுதந்திரம்

கிளிக் குஞ்சு—ஒன்றை
பிடித்து அடைத்தேன்
பறக்க முயன்றது
சிறகை அரிந்தேன்
பலவகை பழங்கள்
புதுவகை உணவுகள்
கொடுத்து வளர்த்தேன்
கிளியும் வளர்ந்தது
இனி போகாது என்று
கூட்டை திறந்தேன்
பறந்தது கிளி
பார்த்தேன் சுதந்திரம்

— கனக தவராசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மாநாடு

அன்பு நண்பா,

தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு, பாழ்பட்டு நிற்கின்ற தமிழ் ஈழத்து மக்கள், குமுறும் உளத்தினராய், கொந்தளிக்கும் நெஞ்சினராய், விடுதல் அறியா விருப்பு விடுதலை வாழ்வின் பால் கொண்டோராய், தம் மீட்சிக்கு வேண்டிய திட்டங்களை உருவாக்கிடும் நோக்குடன் இந்தக் கிழமை கூடுகின்றனர் நம்முடைய தமிழரசு மாநாட்டில்—காங்கேசன் துறைத்தொகுதியில்!!

சீறும் சிங்களத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபடவும்—செந்தமிழ்த் தாய்க்கு அரியணை பெற்றுத் தந்திடவும்—கூறு நூறு செய்திடினும் குலைவுறுது நம இலட்சியம் என்று வீறு கொண்டெழுந்துவிட்ட தமிழர் சமுதாயம் — ஏற்ற புதிய அறப்போர்க்கருவிகளை உருவாக்கிடவும் — இருக்கின்ற கருவிகளை பழுதுபார்த்து திட்டி கூராக்கிடவும், தேய்ந்து பயனற்றுப் போன கருவிகளை நிராகரித்திடவுமே பாசறை அமைக்கிறது இந்தக் கிழமை காங்கேசன் துறைத்தொகுதியில்!!

இடிப்பொடிந்தவர்களும், எம்மால் ஏதும் ஆகாது என்று ஏக்கப் பெருமூச்சு விடுபவர்களும், துடிப்பற்ற, விடுதலை உணர்வற்ற சோற்றுலடித்த பிண்டங்களும், சொந்த வாழ்வையே பெரிதெனக் கருதுவோரும், இயக்கத்தின் கொள்கைகளில் இறுக்கமான நம்பிக்கையற்றோரும், சொல்லும் செயலும் ஒன்ருக இல்லாத கள்ளமனம் படைத்தோரும், தியாகம் செய்திட பின்நிற்போரும், தமிழினத்தின் விடுதலை உணர்வை தம் சொந்த வாழ்வை உயர்த்திடும் கருவியாக பயன்படுத்திடும் சுயநலவாதிகளும் நம்மிடையே யாரும் இல்லை; அப்படியே யாரும் இருந்தாலும், அப்படிப்பட்டவர்களுக்கு இந்த இயக்கத்தில் இனியும் இடமில்லை என்பதை ஊரறிய உலகறிய எடுத்துரைக்கின்ற மாநாடு தான் நமது மாநாடு!

நமது தமிழ் ஈழத்தின் எதிர்காலம் நம்முடைய இளைஞர்களின் கைகளில்; அவர்களே நமது எதிர்கால விடுதலையை நிர்ணயிக்க இருக்கின்ற சுதந்திரச்சிற்பிகள்; அத்தகைய வீர இளைஞர்களின் கோட்டமாக நம்முடைய தமிழரசு இயக்கம் அமைந்தால்தான், இயக்கத்தில் புதிய வேகமும் விறுவிறுப்பும் தோன்றிட முடியும்!

"எதுவித ஓய்வையும் நான் பெறுவது எப்படி? செய்யவேண்டியவை மலைபோன்றிருக்கின்றன. செய்து முடித்ததோ சொல்லக்கூடியவையாக இல்லை; எம்பணியில் தம்மை அர்ப்பணித்தோர் தொகையும் மிக அற்பம். பெருந்தொகையில் எமது இளைஞர்களும் இளம் பெண்களும் முழு இதயத்தோடு நமது இயக்கத்தில் சேரும்வரை அல்லது இறைவன் தன் கருணையில் நிரந்தர ஓய்வு அளிக்கும் வரை நம்முன் எவரும் ஓய்வு பெற முடியாது ஓய்வு பெறவும் மாட்டேன்."

— என்று அன்ருருகால் அமரர் நாகநாதன் அவர்களிடம அமரர் வன்னியஞர் இயம்பியதுபோன்று — நம்முடைய இளைஞர்களும், இளம் பெண்களும் நமது இன விடுதலை இயக்கத்தில் போதியளவு ஈடுபட்டாக வேண்டும்; அவர்களுக்கு இயக்கத்தில் முக்கிய பொறுப்புக்களை கொடுத்து — பயிற்சியளித்து அவர்களை இனத்தின் எதிர்காலத் தளபதிகளாக தலைவர்களாக உருவாக்கிட வேண்டிய பாரிய பொறுப்பு இயக்கத்தின் இன்றைய மூத்த தலைவர்களின் கைகளிலேயே பெருமளவு தங்கியிருக்கிறது.

அந்த வகையில் நமது தமிழரசு தலைமைப் பொறுப்பை நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் ஏற்றிடுது நமக்கெல்லாம் நம்பிக்கையூட்டுவதாகவும், நம் தமிழ்க் காளைகளுக்கு எழுச்சியையும் உத்வேகத்தையும் அளிப்பதாகவும் அமைந்து இருக்கிறது.

நண்பா ஒரு சாதாரண தொண்டன், தன்னுடைய தன்னலமற்ற உழைப்பினுல், தியாகத்தினுல், ஒரு இயக்கத்தின் ஆக உன்னத பதவிக்கு உயர முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் அமிர்தலிங்கம் தமிழரசுக் கட்சியின் தலைமைப்பீடத்தை இன்று அலங்கரிக்கின்ற காட்சியாகும்!

மாணவப் பருவத்திலேயே விடுதலை உணர்வினுல் உந்தப்பட்டு இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, இயக்கத்தின் வளர்ச்சிக்காய் இடைவிடாது பாடுபட்டு, இயக்கம் நடத்திய போராட்டங்களில் எல்லாம் முன்னணிவகித்து பொலிஸ் அடக்கு முறைக்கு ஆளாகி, தடியடிபட்டு, சிறைசென்று, சித்திரவதைகளையெல்லாம் அனுபவித்து — இயக்கத்தின் தானைத் தளபதியாகி, பொதுச் செயலாளராகி, இன்றைக்கு தலைவராக உயர்ந்து நிற்கிருர் நமது அமிர்தலிங்கம்! அவரது குடும்பமே தியாகத்தின் உறைவிடம்!

இன்றைக்கு, நமது இயக்கத்திலுள்ள இளைஞர்களை — பெரியோர்களை — அவர்கள் தமிழ் ஈழத்தில் வாழ்ந்த மூலைமுடுக்குகளில், குக்கிராமங்களில் இருந்தாலும், அவர்களையெல்லாம் அறிந்துவைத்திருப்பவர்—அவர்களையெல்லாம் தன் உடன் பிறப்புக்களாக கருதுபவர்—அவர்களுடைய இன்பதுன்பங்களில் எல்லாம் கலந்து கொள்பவர் — ஒருவர் நம்மிடையே இருக்கிருரென்ருல் அவர் நம்முடைய தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் தான்! அந்த அளவு தொண்டர்களுடன் தொண்டராக நெருங்கி உறவாடி குடும்ப பாச உணர்வுடன் இந்த இயக்கத்தை வளர்த்து வருபவர் அமிர்தலிங்கம்!

கட்சியினுல் தனக்கு என்ன இலாபம் என்பதை எண்ணிப்பாராது—தன்னுல் கட்சிக்கு, சமுதாயத்துக்கு, இனத்துக்கு என்ன இலாபம் என்று எண்ணிடபார்த்து செயல்படுபவர் நமது அமிர்தலிங்கம்! அதுமட்டுமன்றி கட்சிக்குள் தந்தை செல்வாவின் பூரண நம்பிக்கையைப் பெற்றுள்ள ஒரு சிலரில் அமிர்தலிங்கம் முதன்மையிடத்தைப் பிடித்திருப்பவர்!

அத்தகைய ஒரு தியாகத் தலைவன்—இந்நாட்டு தமிழ் இதயங்களை கொள்ளைகொண்டுள்ள வீரத்தளபதி—அமிர் தலைமையேற்றிடும் நமது இயக்கம், இனி புதிய பாதையில்,




புதிய வேகத்தில் புதிய செயல் திட்டங்களுடன் தாயகத்தின் தளையறுத்திடும் புரட்சிப் பணியில் இறங்கிட வேண்டும் என்பதே தமிழ் ஈழத்து மக்களின் — விடுதலை விரும்பிகளின் ஒரே ஆசையாகும்!

இன்றைக்கு நமது தமிழரசு மாநாடு—ஒரு கட்சியின் மாநாடு போல நடந்தாலும்—அது ஒரு கட்சி மாநாடு மட்டுமல்ல; அது தமிழினத்தின் ஒன்றுபட்ட அபிலாஷைகளை பிரதிபலிக்கின்ற மாநாடு; வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம், அன்ஞர் உள்ளத்தால் ஒருவராகி விட்டனர்; எனவே தமிழ் மக்களிடம் கள்ளத்தால் இனி நெருங்கிட முடியாது என்பதை ஆளவந்தார்க்கு எடுத்துக் காட்டிடும் தமிழர் மாநாடு என்பதை நாம் மறந்து விடக் கூடாது!

தமிழ்த் தேசிய இனம், இன்று அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டு அநாதையாக்கப்பட்டு விட்டது; அடிமையாக்கப்பட்டுவிட்டது; இதிலிருந்து மீட்சி பெற நமக்குள்ள ஒரே [illegible] தமிழ் ஈழத்தை அமைப்பதுதான் [illegible] ஆட்சியை தமிழ் ஈழத்தில் நிறுவி—நம் சுதந்திரத்தை நிலைநாட்டுவதுதான் என்பதிலும் தமிழர்களுக்குள் இரண்டுபட்ட கருத்துக் கிடையாது; எனவே பல்வேறு கொள்கை கோட்பாடுகளினுல் சிதறிச் சின்னுபின்னப்பட்டு, பிளவுபட்டுக் கிடந்த தமிழர்கள் இன்று அடிப்படை இலட்சியத்தினுல் ஒன்ருக பிணைக்கப்பட்டு விட்டனர்!

இனி நாம் கண்டுபிடித்திட வேண்டியது— இந்த இலட்சியத்தை அடையும் மார்க்கம் என்ன? தமிழ் ஈழத்தின் இறைமையையும் சுயாதீனத்தையும் மீட்டுக்கொள்வது எப்படி? அரசியல் விடுதலையை மட்டுமன்றி, பொருளாதார சமூக விடுதலையையும் நிலைநாட்டுவது எப்படி என்பனவற்றைத்தான்!

இன்றைக்கு அரசியலில் நாம் அடிமைகளாக்கப்பட்டுள்ளது மட்டுமன்றி — நம்முடையமொழி கலாசாரம் நாகரீகம், மதம், இலக்கியம் ஆகிய துறைகளிலும் 'பௌத்த சிங்களம்' மெல்ல மெல்ல புகுத்தப்பட்டு வருகிறது! இதுமிகவும் ஆபத்தான நிலையாகும்! எனவே நமது இயக்கம், அரசியலுக்குள் மட்டும் நின்று செயறபடாது, மொழித் துறையில், இலக்கியத்துறையில், நாகரீகத்துறையில், கலாசாரத்துறையில், பொருளாதாரத்துறையில் மற்றும் அனைத்துத் துறைகளிலும் விஸ்தரிக்கப்படவேண்டும்; அப்படி விஸ்தரித்து, நாம் செயற்பட்டால் மட்டுமே தமிழர் சமுதாயமும், தமிழ் மொழியும் தமிழர் கலாசாரமும் மதங்களும் இந்நாட்டில் தப்பிப்பிழைத்திடமுடியும்!

ஏனெனில் இன்று தமிழ் ஈழத்து மக்களுக்கு—தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகத்துக்கு—தமிழமொழிக்கு, தமிழர் மதங்களுக்கு, தமிழர் கலாசாரத்துக்கு, தமிழினத்தின் தனித்துவத்துக்கு—அத்தனைக்கும் இருக்கின்ற ஒரே யொரு பாதுகாப்பு அரண் நமது தமிழரசுக்கட்சியும் தமிழர் கூட்டணியுமதான்!

எனவே தமிழ் ஈழத்தின் விடுதலைக்கு — தமிழர் சமுதாயததின் மீட்சிக்கு — குறுகிய கால, நீண்ட காலத்திட்டங்கள் மாநாட்டில் உருவாக்கப்படவேண்டும்; இந்தத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இயக்கம் மேலும் விரிவுபடுத்தப்படவேண்டும்; இயக்கத்துக்காக முழுநேரமாக தங்களை அர்ப்பணித்திட சிலராவது தயாராகவேண்டும்!!

நமது தலைவர்கள் மேடைகளில் அனல் தெறித்திட பேசுகிருர்களேயன்றி, அவற்றை செயல்படுத்துவதில் போதிய அக்கறை காட்டுகிருர்களில்லை என்ற பெரியதோர் பழி நம மீது விழுந்தபடியே இருக்கிறது! அதை மறுத்தோ, மூடிமறைத்தோ பயனில்லை— உண்மை, உண்மைதான்! எனவே இத்தகைய பழி நம்மீது விழாதபடி, திட்டங்களை வாய்ப் பேச்சளவில் மட்டும் விட்டு விடாது— செயற்படுத்துவதற்கு—ஏற்ற தக்கதோர் அமைப்பை வழியை, நமது மாநாடு காட்டிடவேண்டும்!

எனவே நண்பா, எங்கள் இயக்கம், எங்கள் மாநாடு என்றதோர் தமிழின ஒருமைப்பாடு உணர்ச்சியுடன, எழுச்சியுடன், மட்டுநகர், மன்ஞர் திருகோணமலை, வவுனியா, மலையகம், கொழும்பு, யாழ்ப்பாணம் என்று பல்வேறு திசைகளிலிருந்தும் காங்கேசன் துறையில் அணிதிரண்டுள்ள தமிழர் சமுதாயம் — தமிழ்த்தாயின் அடிமை விலங்கினைப் பொடிபடச்செய்திடும் போரணியாக மாறட்டும்! என்ன விலை கொடுத்தும் விடுதலையைப்பெற்றிடுவது என்றுசபதமேற்றிடட்டும்!

இந்த வேளையில் வெலிக்கடையிலும், நீர் கொழும்புச்சிறையிலும், யாழ் சிறையிலும் தமிழினத்தின் மீட்சிக்காக தங்கள் வாழ்வைப் பலியாக்கிவரும் தியாகச் செம்மல்களான உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், சேஞதிராஜா போன்ற [illegible] தமிழ்க்காளையரை நினைவு கூர்ந்து, அன்னவரைப் பெற்ற அன்னை தந்தையரின் அடி தொழுது உறுதியேற்போம் — பெறுவோம தமிழ் ஈழம்!!

உன் அன்புத் தோழன்.

கோவை-மகேசன்

## தலைவன் - இவன் தலைவன்!

அமிர்தலிங்கன் தமிழ் ஈழத்தின
ஆபிரகாம் லிங்கன்!
திமிர் வெறிச் சிங்களம் திணற உலாவும்
திறன்—மாமறவன்!

அமிர்த மாமணித் தமிழ் அன்னைக்கோர்
ஆண்மைத் தமிழ் மைந்தன்
நிமிர் நடை ஏறு! நெடும் படைத்தளபதி
நிறை புகழுடைத் தலைவன்!

அறப் போராடி மண்டைச் செந்நீர்
ஆறுய்ச் சிந்தியவன்!
வெறிக்கூத்தாடும் வெறியர் அரசின்
வெஞ்சிறை ஆடியவன்!


சிறப்போர் ஆயிரம் சேரும் தமிழன்
தேசம் தாங்கியவன்!
குறிக்கோள் அறமாய்க் கொண்டோர் படையின்
கொற்றப் பெருந் தலைவன்!

காற்றில் வல்லான்—கனலில் வல்லான்
கடற்பெருக்கில் வல்லான்!
ஆற்றல் மிக்கான் அமிர்தலிங்கன்!
அருந்திறல் மிகவுடையான்!

போற்றலுக்குப் பொருத்தமானவன்!
பொங்குமலைத் தோளான்!
நூற்றில் ஒருவன்! கோடியில் ஒருவன்!
நுவலரும் தமிழ்த் தலைவன்!

வானை நிகர்த்த செல்வா மழையாய்
வழங்க வரும் தலைவன்;
கூனை நிமிர்த்தி நேர்நடைத் தமிழர்
கொள்ள வரும் தலைவன்!

ஏனையோர் போல எம்மோர் அரியணை
ஏற வரும் தலைவன்!
தானைத் தமிழர் ஆணைத் தலைவன்
தலைவன்—இவன் தலைவன்!



## எழுவாய் தமிழா துணிவாய்

அன்னை விலங்குடைப்போம்
அன்புச் செங்கோல் பிடிப்போம்
அண்ணல் வழி நடப்போம்—தமிழா
அகிம்சைப் போர் தொடுப்போம்

உப்பென்றும் சீனியென்றும்
உள் நாட்டுச் செந்நெல்லென்றும்
தப்பிலிகள் சுரண்ட—தமிழா
கப்பம் கட்டும் நிலையேன்!

எழுவாய் எழுவாய் தமிழா
துணிவாய் துணிவாய் இதுநாள்
களை வாய் தமிழ்த்தாய் துயரே
அடைவாய் தனித்தமிழ் நாடே.

—'ரஞ்சனி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# தமிழர் மாநாடு!

சுதந்திர காலத்திற்கு முற்பட்டிருந்தே இந்நாட்டில் வாழ்ந்துவரும் தமிழ்த்தேசிய இனத்தின் உரிமைகள் — சிங்களப் பெரும்பான்மையினத்தினுல் உருவாக்கப்பட்டிருக்கும் புதிய அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்கப்படாது தமிழ் மக்கள் பூரண அடிமைகளாக்கப்பட்டிருக்கும் ஒரு முக்கியமான நேரத்தில்—

தமிழ் தேசிய இனம் சகல வழிகளிலும், சகல துறைகளிலும் நசுக்கப்பட்டு, அடக்கப்பட்டு — அழிவின் விளிம்புக்கு தள்ளப்பட்டிருக்கின்ற நேரத்தில்—

வாழ்வா, சாவா என்பதை தீர்மானிக்க வேண்டிய நிலைக்கு தமிழினம் தள்ளப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் —

ஐக்கிய இலங்கையின் கீழ் — சிங்கள மக்களைப்போல் சமத்துவம் படைத்த, உரிமையுள்ள மக்களாக வாழ்வதற்கு அரசியல் நிர்ணயசபையிலும், அதற்கு வெளியிலும், புதிய அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் கடந்த ஓராண்டாகவும் தமிழ் தேசிய இனத்தின் கூட்டமைப்பான தமிழர் கூட்டணி அமைதியான முறையில் எடுத்த முயற்சிகள் அனைத்தும் திமிர் பிடித்த ஆட்சிபீடத்தால் தூள் தூளாக்கப்பட்ட நிலையில்—

காந்திஜெயந்தி தினமான அக்டோபர் 2-ல் இருந்து சட்டமறுப்பு இயக்கத்தை மேலும் விரிவுபடுத்திட தமிழர் கூட்டணி முடிவு செய்துள்ள வேளையில் —

காசி ஆனந்தன், ஆனந்த விநாயகம், சேனுதிராஜா, மகேந்திரன் போன்ற ஏராளமான தமிழ் இளைஞர்கள் விசாரணை ஏதுமின்றி சிறைச்சாலைகளில் ஆண்டுக்கணக்காக அடைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் —

புதிய அரசியல் சட்டத்தை முன்வைத்து ஆட்சியாளருக்கு சவால்விடுத்து தமது காங்கேசன்துறை பா. உ. பதவியை தந்தை செல்வா துறந்து ஓராண்டாகியும்—இடைத் தேர்தலை நடத்தாத ஆட்சியாளரின் உலுத்தத்தனம் கண்டு தமிழ் மக்கள் கொதிப்படைந்துள்ள நேரத்தில் —

—இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 12வது மாநில மாநாடு இந்தவாரம் காங்கேசன்துறைத்தொகுதியில் கூடுகிறது.

தமிழரசுக்கட்சி தமிழர்களிடையேயுள்ள மிகப்பெரிய கட்சி; தமிழினத்தை விடுதலைப்பாதையில் வழி நடத்துகின்ற பொறுப்பை தமிழர் கூட்டணியுடன் சேர்ந்து இன்று ஏற்றுக்கொண்டிருக்கின்ற கட்சி.

அக்கட்சியின் மாநாட்டில் தமிழர் கூட்டணியிலுள்ள ஏனைய தோழமைக்கட்சிகளின் தலைவர்களும் பங்குகொள்ளுவதால்—இது தமிழரசுக்கட்சி மாநாடு மட்டுமல்ல; தமிழர் மாநாடுமாகும்!

எனவேதான் இந்த மாநாட்டில் எடுக்கப்படவிருக்கின்ற முடிவுகளை அறிவதில் உலகம் முழுவதுமே இன்று அக்கறை கொண்டுள்ளது.

தமிழரசு மாநாட்டுக்கு இந்தவேளையில் நாம் விடுக்கும் வேண்டுகோள் இதுதான்!

கூடினுர்கள்—பேசினுர்கள் — கலைந்தார்கள்—என்று இந்த மாநாடு முடியுமாஞல், அதனுல் எவ்வித பயனும் இனத்துக்கு ஏற்படப்போவதில்லை!

ஆக்கபூர்வமான திட்டங்கள்— அவற்றைச்செயற்படுத்தும் சீரிய தலைமை — இதுவே இன்று இன விடுதலை இயக்கத்துக்கு இன்று தேவை!

வெறும் சிலுசிலுப்பல்ல—பலகாரம்தான் வேண்டும்!

இதையே தமிழ் மக்கள் தமிழரசு மாநாட்டின் மூலம் இன்று எதிர்பார்க்கிறுர்கள்!

தமிழ் மக்களின் அந்த நம்பிக்கையை தமிழரசு மாநாடு அவம் போக விடாது என்று எதிர்பார்க்கிறோம்!

# தேசியப் பேரவையில் பண்டிதரின் சொல்லம்பு

ஊர்காவற்றுறை தொகுதியிலுள்ள உபதபால் நிலையங்கள் திறக்கப்படாமல் இருப்பது பற்றியும், வேலணையின் தேவைகள் பற்றி வேலணை சிறீலங்கா சுதந்திரக்கட்சி தாதுக்குழு தபால் தந்தி மந்திரிக்கு செய்த முறையீடும் தேவைகளை நிறைவேற்றுவதாக அமைச்சர் கொடுத்த வாக்குறுதிகள் பற்றியும் 4.9.73ல் அரசப்பேரவையில் ஒத்திவைப்பு நேரத்தின் போது பேசிய சாவலூர் பா. உ. அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் அவர்களை இரண்டு கேள்விகள் கேட்டார்,

இந்தக் கேள்விகளுக்குமறுமொழி கொடுக்கும்பொழுது அமைச்சர் சொல்லாராய்ச்சியில் ஈடுபட்டார். உடனே திரு இரத்தினம், ''நான் பேசிய தமிழ் அவருக்கு விளங்கவில்லை. அவருக்கு தமிழ் படிப்பிப்பதற்கு இது உரிய இடமில்லை'' என்று சுடச்சுட பதில் கொடுத்தார். சபாநாயகரும் தலையிட்டு இந்த உபதபால் நிலையங்கள் எப்பொழுது திறக்கப்படும் என்பதைத்தான் ஊர்காவற்றுறை உறுப்பினர் அறியவிரும்புகிறுர் என்று அமைச்சருக்குத் தெரிவித்தார்.

அரசாங்க 'கசெட்'டும் தபாலமைச்சரின் ஊது குழலென முன்னரே பட்டம் பெற்றதுமான தினகரன் அமைச்சர் பேசாதவற்றைப் பேசியதாகவும் திரு. இரத்தினம் பேசியவற்றை மறைத்தும் ஏதோ அமைச்சர் திரு.இரத்தினத்தின்பேச்சில் பிழைகண்டு பிடித்தாரென்று அமைச்சருக்கு வக்காலத்துவங்கி தமிழ் மக்களை ஏமாற்ற மயற்சித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### இந்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகங்கள் முன் மறியல் நடத்தப்படும்.

மீண்டும் இந்த மாதம் பத்தாம் தேதி கூடி,போராட்டதிகதியை நிர்ணயிப்பது என்று முடிவுசெய்யப்பட்டது. அனேகமாக [illegible] பர் மாதம் இப்போராட்டம் நடைபெறும் என்று தெரியவருகிறது.

### மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக

# அலங்கார ஊர்திகளுடன் பிரமாண்டமான ஊர்வலம்

## பொதுக்கூட்டத்தில் தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் உரையாற்றுவர்!

காங்கேசன் துறைத் தொகுதியில் இவ்வார முற்பகுதியில் நடைபெறும் தமிழரசுக்கட்சியின் 12வது மாநில மாநாட்டு நிகழ்ச்சி நிரல் வருமாறு:-

8. 9. 73: சனிக்கிழமை

இராசவரோதயம் அரங்கு:

காலை 8.30:— மங்கல இசை.

9.30:—தொழிலாளர்கள் விவசாயிகள் மாநாடு:

தலைவர்: அ. தங்கத்துரை: பா. உ.

பேச்சாளர்கள்:—க.முத்துலிங்கம், ப. பாலசிங்கம், வே. கைலாயபிள்ளை, ஆ. ஹென்றி, சு. கெங்கரத்தினம், என். ஏ. சின்னத்தம்பி செல்வி. இராசேஸ்வரி இராமச்சந்திரன், மு. ஆலாலசுந்தரம்.

காலை 11.00 மணி:—இளைஞர் மாநாடு:

தலைவர்:— க. துரைரத்தினம். பா. உ.

பேச்சாளர்கள்:- செல்வன் வை பாலகிருஷ்ணன், எஸ். கஜேந்திரன், அ.புராந்தகன் பொ. கணேசமூர்த்தி செகராசசிங்கம், எஸ். சங்கரலிங்கம்.

பிற்பகல் 2.30:—இலக்கிய மாநாடு:

தலைவர்:— செ. இராசதுரை பா. உ.

பேச்சாளர்கள்:— இரசிகமணி கனக செந்திநாதன், பண்டிதர் கா. பொ. இரத்தினம், ஈழவேந்தன், இ. தி. மு. க. பொதுச்செயலாளர் எஸ். எம். எஸ். செய்யது முகம்மது, இ. தி. மு. க. உறுப்பினர் திரு. மயில்வாகனம்.

மாலை 4.00 மணி:- மாதர் மாநாடு:

தலைவி:— திருமதி. இராசபூபதி அருணுசலம்.

பேச்சாளர்கள்:— வைத்திய கலாநிதி செல்விதேவா, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்.

மாலை 5.30 மணி:— கவியரங்கு.

தலைவர்:—மு. ஆலாலசுந்தரம்.

பங்குபற்றுவோர்:— கரவைகிழான், மு. திருநாவுக்கரசு நயினை நா. சிவராசசிங்கம், காரை சுந்தரம் பிள்ளை.

இரவு 7.00 மணி:— கலை நிகழ்ச்சிகள்:

தலைவர்: திரு. சே. மா. செல்லத்தம்பு பா. உ.

(1) வில்லுப்பாட்டு.

(2) நாடகம் — 'மகுடபங்கம்'—(மாவை முத்தமிழ் மன்றம்.)

(3) 'கல்சுமந்த கசடர்கள்'—(முருகன் முத்தமிழ்க் கலாமன்றம்)

(4) பண்டாரவன்னியன் (முள்ளியவளை இளைஞர்கள்)

9. 9. 73:—ஞாயிற்றுக்கிழமை

அமரர் வன்னியசிங்கம் அரங்கு:—

காலை 9.00 மணி:— அரசியல் மாநாடு.

—பொதுச் செயலாளர் அறிக்கை, தீர்மானங்கள் உத்தியோகத்தர் தெரிவு—

பிற்பகல் 4 மணி:— பிரமாண்டமான ஊர்வலம் மல்லாகம் கட்சிக்கிளைக் காரியாலயத்திலிருந்து, அலங்கார ஊர்திகள் முன்செல்ல காங்கேசன் துறை நோக்கிப் புறப்படும்.

மாலை 6.00 மணி:— காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தில் பொதுக்கூட்டம், தலைவர் நாவலர் அமிர்தலிங்கம்:—கூட்டத்தில் தமிழர் கூட்டணியிலுள்ள தோழமைக்கட்சிகளின் தலைவர்களும் கட்சிப்பிரமுகர்களும் உரையாற்றுவார்கள். அரசியல் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானம் பொதுமக்களுக்கு பகிரங்கமாக இக்கூட்டத்தில் அறிவிக்கப்படும்.

### தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட சட்டங்களை மீறி ஆயிரக்கணக்கில் சிறை செல்ல தயாராகவேண்டுமென்று திரு. அமிர்தலிங்கம் தமது உரையில் அழைப்பு விடுத்தார்.

"அண்ணு கூறியபடி கடமை கண்ணியம் கட்டுப்பாடு காத்து — அண்ணல் காந்தியின் வழியில் ஒத்துழையாமை, சட்டமறுப்பு என்ற ஆயுதங்களைத் தாங்கி —வங்கத்தலைவர் முஜிபுர் ரகுமான் ஏற்படுத்தியது போன்று இன ஒற்றுமையையும் ஏற்படுத்துவோமானல் — வங்கம் விடுதலை பெற்றதுபோன்று இங்கும் தமிழ்தேசிய இனம் உரிமை பெற முடியும் என்பது உறுதி" என்று அவர் மேலும் தமது உரையின் போது முழக்கமிட்டார்.

தமது உரையின் துவக்கத்தில், வெலிக்கடைச் சிறையிலும், நீர்கொழும்புச் சிறையிலும், யாழ்ப்பாணம் கோட்டைச் சிறையிலும் தமிழுக்காக தவம் செய்துகொண்டிருக்கின்ற தமிழ் ஈழத்தின் வீர இளைஞர்களை நினைவு கூர்ந்த தலைவர் அமிர்தலிங்கம், பேச்சின் இறுதியில் தமிழ் இளைஞர்களுக்கு இத்தாலிய விடுதலை வீரன் கரிபோல்டி போல இடிமுழக்கத்துடன் இப்படி அழைப்பு விடுத்தார்:-

"தமிழினம் வாழ்வதா அல்லது தாழ்வுற்று அழி[illegible] [illegible] என்பது உங்கள் [illegible] [illegible] தங்கி[illegible] நீங்கள் கிளர்ந்தெழாவிட்டால் எங்களுக்கு விடிவில்லை. இத்தாலிய நாட்டு இளைஞர்களை அழைத்தது போலவே உங்களை நாம் அழைக்கின்றேம். உடனடியாக நாம் உங்களுக்கு தரக்கூடியது பொலிசாரின் அடிபட்டாளத்தினரின் இடி, சிறைவாழ்க்கை, துன்பம், சில சமயம் வீர மரணமாகவும் இருக்கலாம்— இவற்றைத் தாண்டிச்சென்றுல் மட்டுமே விடுதலை பெற்ற தமிழ் ஈழத்தை, சாதிபேதமொழிந்த சமதர்ம தமிழர் சமுதாயத்தை நாம் காண முடியும்:-"

(திரு. அமிர்தலிங்கத்தின் தலைமையுரை விபரம் 5ம் பக்கத்தில் காண்க.)

### மீண்டும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நூலை வெளியிட்டு வைத்து அவர் பேசுகையில் இலங்கைத் தமிழர்களின் போராட்டத்துக்கு உலகெங்குமுள்ள தமிழர்கள் ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து 'இலங்கை மீண்டும் எரிகிறது' எனும் நாடகமும் மேடையேற்றப்பட்டது. சிறையில் வாடும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் நீதி மன்றத்தின் முன்பு நிறுத்தப்பட்டால் என்ன நடக்கும் என்பதை மையக்கருத்தாக வைத்து இந்நாடகத்தை ஆக்கியிருந்த இரா. சனுர்த்தனம்,உணர்ச்சிகரமான உரையாடல்களையும் தாமே எழுதியிருந்தார்.

உணர்ச்சிமயமான இந்நாடகத்தில்—காசி ஆனந்தனுக இரா. சனுர்த்தனமும், நீதிபதியாக முரசொலி அடியாரும், பேரறிஞர் அண்ணுவாக 'அண்ணு புகழ்' இராஜ் மோகனும் அரசு வழக்கறிஞராக நாஞ்சில் பாலனும், சிந்தியாபிள்ளையாக எஸ். எஸ். சந்திரனும், பெரேத்தயாவாக ஏ. ஜீவாவும், குமாரசூரியராக எம். எம். மூர்த்தியும்,துரோகசிவமாக இயற்கை அரசனும், லெனின் ஆசுசுதிரொனியும், மணவைத்தம்பியாக மணவைத்தம்பியும், சுசிலாவாக குமாரிதிலகமும், சௌத்திரியாக எஸ். ஆர். நடராசனும், இராவணனுக பொலீஸ் கண்ணனும் உணர்ச்சி பொங்க நடித்தனர்.

இந் நாடகத்தை நெறிப்படுத்தியவர்.'அண்ணுபுகழ்' இராஜ் மோகன் அவர்களாவர். இந்நாடகம் தமிழ் நாடகம் தமிழ் நாட்டின் சகல மாவட்டங்களிலும் மேடையேற்றப்படவுள்ளது. தமிழ் நாட்டு மக்களை, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை மீது அக்கறையெடுக்கத் தூண்டக்கூடியதாகவும் இலங்கைத் தமிழர்களின் அவலநிலையை விளக்குவதாகவும் இந்நாடகம் அமைந்து பலரின் பாராட்டையும் பெற்றுவிட்டது:

### ஈழத் தமிழி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

14 ஆம் நூற்றுண்டில் கோட்டையை ஆண்ட சிங்கள மன்னனை வென்று அவனிடங் கப்பம்பெறும் அளவிற்கு யாழ்ப்பாணத் தமிழ் மன்னன் பராக்கிரமம் பெற்றிருந்தான் என்பது மறுக்க முடியாத உண்மை. இருபது மைல்களுக்கப்பால் நாலு கோடி தமிழர்கள் உரிமையோடும் உயிர்த்துடிப்போடும் வாழும்வரைக்கும் தமிழினத்தைப் பலவந்தமாக அழிக்கும் எண்ணம் பகற்கனவாகவே முடியும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழினத்தின் விடுதலைப் போருக்கு உலக அனுதாபத்தைத் திரட்டுவோம்!

## இருபது மைல்களுக்கப்பால் 4 கோடி தமிழர் உண்டு! எம்மைப் பலவந்தமாக அழிக்க நினைப்பது பகற்கனவு!

## தமிழரசு மாநாட்டில் அமிர்தலிங்கம் தலைமையுரை!

வரவேற்புக்குழுத் தலைவர் அவர்களே!

தமிழினத்தின் தந்தை அவர்களே!

தோழமைக் கட்சிகளின் தலைவர்களே!

பெரியோர்களே தாய்மார்களே!

தம்பிமார்களே தங்கைமார்களே!

இந்நாடு ஓர் திருப்புமுனையில் நிற்கிறது. அந்நிய ஏகாதிபத்தியங்களோடு இருந்த இறுதி அரசியல் தொடர்பும் துண்டிக்கப்பட்டு விட்டது. நாடு குடியரசாகப் பிரகடனஞ்செய்யப்பட்டு ஓராண்டு பூர்த்தியாகிவிட்டது. அந்நியர் பிடியிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கென்று ஆக்கப்பட்ட அரசியலமைப்பு, இந்த நாட்டில் வாழும் தமிழினத்தின் அடிமைத் தளையை முன் எப்போதும் இல்லாத வகையில் இறுகப் பிணைத்திருக்கின்றது. அதே நேரத்தில் நாட்டு மக்கள் எல்லோரினதும் பேச்சுரிமை, எழுத்துரிமை முதலிய அடிப்படை சனநாயக உரிமைகள் அத்தனையும் பறிக்கப்படுவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டன. ஏதேச்சாதிகார இருள் பயங்கரமாகப் பரந்துவருகின்ற சூழ்நிலையில் இம் மாநில மாநாடு ஆரம்பமாகிறது.

### முக்கியத்துவம்

இந்நாட்டின் அரசியல் வாழ்வில் முக்கியமான இடம் பெற்று விளங்கிய தலைவர்களைப் பிரதிநிதியாகப் பெற்றிருந்ததும், தன்னகத்தே பெற்றெடுத்ததும் காங்கேசன்துறைத் தொகுதியாகும். சேர். பொன்னம்பலம். இராமநாதன் சட்டநிரூபண சபையில் வீற்றிருக்கச் செய்ததும், திரு. செல்வநாயகம் அவர்களைப் பாராளுமன்றத்தில் பல்லாண்டு காலமாகப் பிரதிநிதித்துவம் வகிக்கச் செய்ததும், அமரர் வன்னியசிங்கம் அவர்களைப் பெற்றெடுத்துத் தந்ததும் இத்தொகுதி என்றால், அதற்குத் தமிழினத்தின் வரலாற்றில் அதி உன்னதமான ஒரு இடம் உண்டுஎன்பது உறுதி. அன்றியும் பண்டைத் தமிழரசின் நுழைவாயிலாக விளங்கிய துறைமுகமும், புராதனப் பெருமை வாய்ந்த மாவிட்டபுரம் முருகன் ஆலயமும், புகழ்பெற்ற புனிதம் வாய்ந்த நகுலேஸ்வரமும், கீரிமலைத் தீர்த்தமும் தன்னகத்தே கொண்டு விளங்கும் இத்தொகுதியில் நடைபெறும் எமது கட்சியின் 12வது மாநில மாநாட்டிற்குத் தலைமை தாங்கும் பெரும் பேற்றை எனக்கு அளித்த உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

### ஒற்றுமை

தளர்ந்த நிலையிலும் உறுதி குலையாது சத்திய நெறியில் தமிழினத்தை வழிநடத்திச் செல்லும் தந்தை செல்வநாயகம் அவர்களும், தியாகச் செம்மல் அமரர். வன்னியசிங்கம் அவர்களும், திருமலை ஜோதி திரு. இராஜவரோதயம் அவர்களும், மட்டக்களப்பு தந்த மாணிக்கம் திரு இராசமாணிக்கம் அவர்களும், உள்ளத்தாலும் உடலாலும் இரும்புமனிதனாக விளங்கிய தீரர் நாகநாதன் அவர்களும், அலங்கரித்த இத்தலைமைப் பீடத்தில் அமரும் வாய்ப்பை எனக்கு அளித்திருக்கின்றீர்கள்.

எமது கட்சியின் முந்திய மாநில மாநாடுகளை விட இம் மாநாடு ஒரு வகையில் சிறப்புப்பெற்றிருக்கின்றது. கடந்த காலத்தில் பல்வேறு கட்சிகளாகப் பிளவுபட்டிருந்த தமிழினம், இன்று தன் உரிமையைப்பெறும் உறுதியோடு ஒன்றுபட்டு விட்டது என்பதை இம் மேடைமீது வீற்றிருக்கும் எம் தோழமைத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் உலகுக்கு உணர்த்திக்கொண்டு இருக்கின்றார்கள். இந்த ஒற்றுமையைச் சிதறவிடாது கட்டிக்காக்கும் உறுதியோடு இம் மாநில மாநாடு நடைபெறுகிறது என்பதையும் அதே ஆவலோடு அதன் தலைமைப் பதவியை நான் ஏற்றிருக்கின்றேன் என்பதையும் முதற்கண் கூறி வைக்க விரும்புகின்றேன்.

### உள்ளம் அங்கே...

இவ்வரங்கில் உரைநிகழ்த்திக்கொண்டு நிற்கும் பொழுது என் உள்ளம் வெலிக்கடைச் சிறையிலும், நீர்கொழும்புச் சிறையிலும், யாழ்ப்பாணம் கோட்டைச்சிறையிலும் தமிழுக்காகத் தவம்செய்து கொண்டிருக்கின்ற, என் தம்பிகளை நாடிச்செல்லுகின்றது. அவர்களைப்பிரிந்து வாடிவதங்கும் பெற்றோருக்கும், உற்றோருக்கும் நாம் என்ன ஆறுதல் கூற முடியும்? அவர்கள் உடல்களிற் பட்ட அடிகள் ஒவ்வொரு தமிழன் மீதும் பட்டதாகக் கருதப்பட வேண்டும். அவர்கள் படும் இன்னல் அவம் போகாது. அவர்களுடைய துன்பத்தில் இருந்து தமிழினத்தின் விடுதலை விளையும் என்றே உறுதியாக நம்புகின்றேன்.

### நண்பர்களே,

ஆங்கில ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திரம்பெற்ற 1948ஆம் ஆண்டு தொடக்கம் தமிழினத்துக்குப் பல்வேறு தலைவர்கள் வெவ்வேறு பாதைகளைக் காட்டி வந்தார்கள். சோல்பரி அரசியல் திட்டம் இந்நாட்டில் புகுத்தப்பட்ட நேரத்தில், அதையொட்டி அரசாங்க சபையில் வெள்ளை அறிக்கை மீது 1945ஆம் ஆண்டுநடந்த வாக்களிப்பில் கலந்துகொண்ட வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழ்ப் பிரதிநிதிகள் அத்தனைபேரும் அவ்வெள்ளை அறிக்கையை ஏற்று வாக்களித்தார்கள். சிங்கள மக்களோடு ஒத்துழைப்பதன் மூலம் தமிழ் மக்களின் நல உரிமை பாதுகாக்கப்படுமென்று அவர்கள் நம்பியிருக்கலாம். ஆனால் தமிழ் மக்கள் அக்கருத்தைக் கொண்டிருக்கவில்லை.

1947ஆம் ஆண்டு நடைபெற்ற முதற் பாராளுமன்றத் தேர்தலில், ...

ஒத்துழைத்த தமிழ்ப் பிரதிநிதிகளில் ஒருவர் தவிர ஏனையோர் தமிழ் மக்களாற் தோற்கடிக்கப்பட்டனர். போராட்டப் பாதையை நாடிநின்ற பிரதிநிதிகளே தெரிவுசெய்யப்பட்டனர். ஆயினும் அப்பாராளுமன்றத்திலும் அடுத்து 1952ஆம் ஆண்டுதெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றத்திலும், தமிழ்ப் பிரதிநிதிகளிற் பெரும்பாலோர் சிங்கள ஆட்சியாளருக்கு ஒத்துழைப்பு நல்கி வந்தனர். இதன் சரி, பிழை பற்றிய சர்ச்சைக்கு இது நேரமல்ல.

1956ஆம் ஆண்டின் ஆரம்பத்தில்தனிச்சிங்களக்கொள்கையை ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், அக்கட்சியின் தலைவர் அமைத்த மக்கள் ஐக்கிய முன்னணியும் ஏற்றுக்கொண்ட பின்பு, அக்கட்சிகளில் இருந்த தமிழ் உறுப்பினர் வெளியேறினர். அக் கட்சிகள் பெயரளவில் தேசியக் கட்சிகளாக இருந்த போதிலும், உண்மையில் சிங்கள வகுப்புவாதக் கட்சிகளாகவே இயங்கிவருகின்றன.

### சிங்களக் கூட்டணி

1960ஆம் ஆண்டின் பின் இடதுசாரிக் கட்சிகளான சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும் தனிச் சிங்களக் கொள்கைகளை ஏற்று சிங்கள வகுப்புவாதத்திடம் சரணாகதி அடைந்தன. 1971ஆம் ஆண்டு புரட்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முற்பட்ட இடதுசாரி இயக்கங்களும் சிங்கள இனவாத அடிப்படையில் இருந்து எழுந்தனவேயன்றி இலங்கைத் தேசியத்தைக் கருத்திற்கொண்டிருக்கவில்லை.

தமிழ்மக்களுடன் தொடர்பற்ற, எவ்வகையிலும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கருதமுடியாத செயற்கைத் தலைவர்கள் சிலரையும், தாம் சார்ந்திருந்த கட்சிகளிலிருந்து விலக்கப்பட்ட தமிழ்த் தேசியப் பேரவை உறுப்பினர் ஒருசிலரையும் இன்றைய ஆளும் கட்சி தன்னகத்தே கொண்டிருந்தாலும் அது சிங்களக் கட்சிகளின் கூட்டணி என்பதும், சிங்களம் அதன் ஆட்சிமொழி என்பதும்மறுக்கமுடியாத உண்மைகளாகும். இச்சிங்களக் கூட்டணியின் ஆதிக்கத்தில் இருந்து தமிழினத்தை விடுவிக்கவும், அதன் தாக்குதலில் இருந்து தமிழினத்தைக் காக்கவும் எழுந்ததே தமிழர் கூட்டணி.

### நாட்டின் இரு இனங்களின் பிளவு

தமக்குள் அரசியல் பொருளாதாரக் கருத்துகளில் வேறுபாடு கொண்டிருந்தாலும் தென் இலங்கை அரசியல் கட்சிகள் அத்தனையும் தமிழினத்தின் உரிமைகளை மறுப்பதில் ஒன்றுபட்டு நிற் ...

பொறுத்தவரையிலும், அவற்றிற்கு மக்களின் ஆதரவைப் பொறுத்தவரையிலும், இந்நாட்டின் இரு தேசிய இனங்களும் பிரிந்தே நிற்கின்றன.

தமிழரசுக்கட்சியோ, தமிழர் கூட்டணியோ நாட்டைப் பிரிக்க முனைவதாக குரலெழுப்புபவர்கள், 1948ஆம் ஆண்டு இந்நாடு சுதந்திரம் பெற்றபின் ஏற்பட்ட இந்த அடிப்படைப் பிளவை உணராதோ அல்லது உணர்ந்தும் அதை மறைத்தோ பேசி வருகின்றவர்.

அரசாங்க சபையில் வாக்களித்த வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் சோல்பரி அரசியல் திட்டத்தை ஆதரித்ததை முன்பு குறிப்பிட்டேன். ஆனால் 1972ஆம் ஆண்டு மே மாதம் 22ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட குடியரசு அரசியல் அமைப்பில் தமிழ்ப் பிரதிநிதிகள் எப்படி வாக்களித்தனர். தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட யாழ்ப்பாணப்பிரதிநிதியும், தமிழ்க் காங்கிரசில் இருந்து வெளியேற்றப்பட்ட நல்லூர், வட்டுக்கோட்டைப் பிரதிநிதிகளும், சுயேச்சையாகத் தெரிவு செய்யப்பட்டுச் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தாவிய மட்டக்களப்பு இரண்டாவது உறுப்பினரும் தவிர்ந்த ஏனைய தமிழ் உறுப்பினர்கள் இவ் அரசியல் அமைப்பை நிராகரித்து, அரசியல் நிர்ணயசபையின் இறுதிக் கூட்டத்தையே பகிஷ்கரித்தமை சரித்திரத்தில் இடம்பெற்ற சம்பவமாகும்.

25 வருட சுதந்திர அரசியல் சரித்திரத்தில் தமிழினம் படித்த பாடமே குடியரசு அரசியலமைப்பை, அவர்களை நிராகரிக்கச் செய்தது. இலங்கை குடியரசாக்கப்பட்ட 1972 மே 22ஆந் திகதி தமிழ் ஈழம் முழுவதும் துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட்டது. அரசியலமைப்புத் தீயிலிடப்பட்டது. மக்கள் தாமாகக் கிளர்ந்தெழுந்தனர். குறிப்பாக வாலிபர்கள் கொதித்தெழுந்தனர். பல வாலிபர்கள் கைதுசெய்யப்பட்டு மாதக்கணக்கில் அடைத்துவைக்கப்பட்டனர். அரசியலமைப்பை ஆதரித்து வாக்களித்த தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழ்ப் பிரதேசங்களுக்கே செல்லமுடியாது தென்னிலங்கையில் பதுங்கி வாழ்ந்தனர். அரசியல் கட்சி ரீதியாக மாத்திரமின்றி உள்ளத்தாலும், உணர்ச்சியாலும் இந்நாட்டின் இருதேசிய இனங்களும் பிரிந்துவிட்டன என்பதை இது எடுத்துக்காட்டியது.

### ஆட்சியாளர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பம்

ஒன்றுபட்ட தமிழினத்தின் ஒரே அமைப்பான தமிழர் கூட்டணி அரசாங்கத்திற்கும் சிங்கள இனத்திற்கும் இந்நாட்டின் ஒற்றுமையைக் காப்பதற்கு ஒரு இறுதிச் சந்தர்ப்பம் அளித்தார்கள். அரசியலமைப்பைத் திருத்துவதற்கான ஆறு அம்சக் கோரிக்கை 1972ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ந் திகதி அரசாங்கத்திற்கு விடுக்கப்பட்டது. அதை அரசாங்கம் முற்றாக உதாசீனஞ் செய்து தமிழினத்தையே அவமதித்தது. ஆளுங்கட்சிகளுக்கு வெளியில் இருக்கும் எந்த சிங்களத் தலைவரோ, அரசியலியக்கமோ சிங்களமக்களின் கருத்தைத் திருத்தி இன ஒற்றுமையை ஏற்படுத்தும் சக்தியோ, நாட்டமோ உடையவராக இருக்கவில்லை. சிங்களத் தலைவர்களின் அரசியல் ஞானத்திற்கும், தொலைநோக்கிற்கும் விடுக்கப்பட்ட சவாலில் அவர்கள் தோல்வி அடைந்துவிட்டார்கள்.

ஆயுத பலத்தாலும், அடக்குமுறையாலும் தமிழினத்தின் மத்தியில் உள்ள எட்டப்பர் ஒருசிலர்மூலம், அவர்களுடைய கையாட்கள் சிலருக்கு அற்ப சலுகைகளை வழங்கி தமிழினத்தை அடக்கி ஆண்டு, இறுதியில் சிங்களமயமாக்கி அழித்துவிடலாமென்று ஆட்சியாளர் கனவு காண்கின்றனர். 2,500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இந்நாட்டின் வரலாற்றைப் புரிந்துகொள்ளாத அறியாமையில் இருந்து எழுவதே இக்கனவாகும்.

சரித்திரத்துக்கு முற்பட்ட காலம் தொடக்கம் இந்நாட்டில் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் வாழ்ந்திருக்கின்றார்கள். சிங்கள மக்கள் பெரும்பாலோராகவாழ்ந்த தமிழர்கள் சிலர் நாளடைவில் சிங்களவர்களாக மாறிவிட்டனர் என்பது சரித்திர உண்மை. ஆனால் தமிழகத்துக்கு அண்மிய வடக்குக் கிழக்குப்பகுதிகளில்வாழ்ந்த தமிழர்கள் பெருகிப், பலம் பெற்று, சிங்கள அரசர்கள் தமது இராசதானிகளை மாற்றியாற்றிச் செல்லக் கூடியதாகத் துரத்தினார்கள் என்பதும் சரித்திர உண்மை.

(4-ம் பக்கம் பார்க்க)

அறுவடை

''நல்ல விதை விதைத்தவனுக்கு நல்ல அறுவடை, கெட்ட விதை விதைத்தவனுக்கு அதற்கேற்ற அறுவடை, எத்தகைய வினையை ஒருவன் விதைக்கிறானோ அத்தகைய அறுவடை அவனுக்குரியது. பெருவாழ்வு என்னும் விதை விதைப்பவன் பேராளன் ஆகிறான்.''

—சுவாமி சித்பவானந்தர்.

மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளை அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப்படியுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**
**த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசு மாநாடே! தமிழர் வாழ

# வழி வகுப்பாய்!

இலங்கையில் வாழுகின்ற 35 இலட்சம் மக்களின் இதயதாகமாகிய தமிழர் கூட்டணியின் அங்கமாகிய தமிழரசுக் கட்சியின் மாநில மாநாடு இவ்வாரத் துவக்கத்தில் காங்கேசன் துறையில் கூடுகிறது. இம் மாநாடு தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ வழி வகுக்குமென அனைவரும் எதிர் பார்க்கின்றனர்கள்.

### தந்தையின் ஆணைக்குத் த[illegible]வணங்குகிறது

வீரம் நிறைந்த மண்ணில் இம்முறை மாநாடு நடைபெறப்போகிறது: முன் அதே நிலத்தில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணி மாநாட்டையும் நாம் மறந்து விட முடியாது. வாலிப முன்னணி மாநாட்டுக்காய் இரவு பகலாய் உழைத்து, தமிழர் வாழ்வுக்கே தன்னை அர்ப்பணித்த தமிழரசு வாலிப முன்னணியின் நிர்வாகச்செயலாளர் திரு. மாவை சோ. சேனாதிராசா இன்று சிறைக்கதவுகளின் பின்னே இருப்பதையும் எண்ணிப் பார்க்கின்றோம்.

தமிழர் வாழ, தமிழ் வாழ தங்களையே கொடுத்து, துன்பத்தையும், துயரத்தையும், இம்சையையும், சித்திரவதையையும் தாங்கிக் கொண்டு கவிஞர் காசி ஆனந்தனும், வண்ணை ஆனந்த விஞயகனும் இன்னும் பலரும் சிறையில் வாடுகிறார்கள். தமிழ் தாய் தன் பொலிவிழுந்து நிற்கிறாள், அரசாண்ட பரம்பரை இன்று அடிமைவேலை செய்கிறது. யாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்ற நாம் எம்மிடம் சொந்தமாக இருந்த எல்லாவற்றையும் இழந்து விட்டோம். அடிமைகள், குற்றேவல் புரிவோர், பாதம் தாங்கிகள், பணிபுரிவோர், எச்சில் இலைக்கு நிற்போர், என எம்மை எம் தினத்தை —அடையாளம் காட்ட எம்மில் ஒரு சிலர் நீலத்தில், பலர் சிகப்பில், சிலர் முற்போக்குக் காங்கிரசில், வேறு சிலர் பௌத்த பேரவையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் (பிற்பக்க நியமனத்தில்) பலாலியில், பட்டின, நகர, மாநகர சபைகளில் — இப்படியே எத்தனை அடிமைகள்! தான் வாழ வேண்டுமென்பதற்காக இப்படியான ஒரு கூட்டம், ஆட்டமே போடுகிறது.

இந்தக் கயவர்களின் நலனுக்காகவும் தமிழர்களின் தந்தை செல்வா அவர்கள் எத்தனை வருடமாக உழைத்து வருகிறார். இலங்கையின் ஆட்சியில் எத்தனை பிரதமர்களோடு ஒப்பந்தம் செய்தார். எத்தனை அரசியல் கட்சிகளோடு பேரம் பேசினார், ஏதாவது ஒரு சுயநலத்துக்கா? பதவிக்கா? பட்டத்துக்கா? இல்லவே இல்லை. அத்தனையும், தமிழ் வாழ, தமிழர்கள் தமிழைப் பேசி வாழ்வதற்கே! இலங்கையில் நேர்மையான ஒரு அரசியல் தலைவன் என எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர். அவரது தலைமைக்கு, அவரது கட்சிக்கு நாம் சிரம் தாழ்த்தித் தலை வணங்குகின்றோம்.

### அரசியல் அமைப்பு சவாலாக அமைகிறது

தமிழர்களிடமிருந்த அரசியல் அமைப்பு போர்த்துக்கேயருக்குக் கைமாறி, ஒல்லாந்தருக்குப்போய், ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டு இன்று சிங்களவர்களின் கைகளில் இருக்கிறது. இலங்கைக்காக ஒரு அரசியல் அமைப்பு ஏற்படுத்தப் படவில்லை என்பதை எல்லோரும் அறிவர், ஆனால் அரசியல் அமைப்பு என்ற போர்வையில் சிங்கள மக்கள் தங்களுக்கு சாதகமாகவும் தமிழர்களை அடிமைபடுத்தவும் கூடிய ஒரு அரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொண்டனர். அவர்கள், மதம், மொழி, நிலம், அரசுடமை, அரசியல் அத்தனையும் மொத்தமாக அரசியல் அமைப்பில் முதலிடம் பெற்றிருக்கிறது. தமிழர்களின் மொழி, மதம், நிலம் அரசுடமை, அரசியல், எதுவுமே சிங்களவர்கள் பெற்றதை -- நாம் பெறமுடியவில்லை. இன்றைய அரசியல் அமைப்பு தமிழர்கள் ஒவ்வொருவரையும் பார்த்துக் கேலி செய்கிறது. உன்னால் முடியுமா? என்று கேட்டு எள்ளி நகையாடுகிறது.

### தமிழர்களே ஒன்றுசேர்த்தோம்

இலங்கையில் தமிழர்களில் மிகப் பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அரசியல் கட்சி தமிழரசுக்கட்சியே! பாராளுமன்றத்தில்கூட தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதியாக 2/3 பகுதி தமிழ் பிரதிநிதிகளைக் கொண்டதும் தமிழரசுக்கட்சியே! வடக்குக்கிழக்கு மாகாணங்களில் சகல தொகுதிகளிலும் வெவ்வேறு காலங்களில் வெற்றிபெற்ற ஒரே ஒரு கட்சி தமிழரசுக்கட்சி தான். (சிங்களக் கட்சிகள் கூட சகல தொகுதிகளிலும் ஒரு கட்சி வெவ்வேறு காலங்களில் வெற்றிபெறவில்லை.)

இத்தனை பலம் வாய்ந்த கட்சி வீண் அகங்காரம் கொள்ளாமல் தமிழர்களின் நலனில், வாழ்வில் அரசியலில் நம்பிக்கைகொண்டு தமிழ்பேசும் மக்களின் வாழ்வுக்கு உழைக்கும் அரசியல் கட்சிகளை மட்டுமல்ல, தனிப்பட்டவர்களையும் இணைத்து இன்று தமிழர் கூட்டணியாக மலர்ந்திருக்கின்றது.

தமிழர்களை வாழ்விக்க தந்தையின் சொந்த மண்ணில் கூடுகிறோம் வாரி வளங்கும் கடலும், வளம் தரும் சோலைகளும், இனிய பழமரங்களும், கீரிமலை நீரூற்றும், சிறப்புறும் இந்து கிறிஸ்தவ ஆலயங்களும், எதிர்காலத்தில் சிறப்பாக அமையப்போகும் காங்கேசன்துறை துறைமுகமும் உப உணவில், கலைக் கூடங்களில் விஞ்ஞான விவசாய இலக்கிய விரிவாக்க துறைகளில் விற்பன்னர்களாகத் திகழ்ந்தவர்களின் பிறந்த மண்ணிலே கூடுகின்றோம். தமிழர் தந்தை செல்வாவின் சிந்தை மகிழ்ந்த சிறப்புப் பேசும், எம் தந்தையர் பூமியில் சேருகின்றோம். தமிழர்களுக்கு தலைவனாக தந்தை இருப்பதைப்போல, தமிழர்களின் வாழ்வுக்கு வழி காட்டும் மாநாடு நடைபெறும் தங்கப்பூமியாக காங்கேசன்துறைத் தொகுதி விளங்கட்டும்.

### வாழ்விக்கும் தீர்மானம் வேண்டும்

எல்லாமே முடிந்துவிட்டது. சகலதும் இழந்தாயிற்று, இனியும் நேரம், காலம் கொடுப்பதும் அதைப் பார்ப்பதும், மீண்டும் சிந்திப்பதும், ஆலோசிப்பதும், தவணைகொடுப்பதும், எம்மை நாம ஏமாற்றிக்கொள்வதாகும். தற்கொலை முயற்சியாகும். எனவே தமிழர்களை வாழவைக்கும் தீர்மானம்வேண்டும். விசய ஆலோசனைச்சபையும், பொதுச் சபையும் இவ்விடயத்தில் சோர்ந்துபோகக்கூடாது.

சிங்கள மக்களுக்குக் கிடைத்திருக்கும் அரசியல் அமைப்பைப்போல தமிழ் மக்களுக்கும் கிடைக்கவேண்டிய அவசியத்தை நாம் ஏற்றேயாக வேண்டும். ஏன் அதைப் பெற்றேயாகவேண்டும், அதற்குக் குறைந்தால் மானமுள்ளவர்கள் மடிந்து மாலையிடுபவர்கள் சமுதாயம் உருவாகட்டும்.

(7-ம் பக்கம் பார்க்க)

## முத்து—சுப்பிரமணியம்

# அன்றிலிருந்து இன்றுவரை தமிழரசு மாநாடுகள்!

**1949**ம் ஆண்டு மார்கழித் திங்கள் 18ம் நாள் இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது. தலைவராக தந்தை செல்வா அவர்களும் இணைச் செயலாளர்களாக திரு. வி. நவரத்தினம், டாக்டர் இ. மு. வி. நாகநாதன் ஆகியோரும்தெரிவுசெய்யப்பட்டனர்.

### முதல் மாநாடு

கட்சியின் முதலாவது தேசிய மாநாடு 1951ம் ஆண்டு சித்திரைத் திங்களில் திருகோணமலையில் நடைபெற்றது. மாநாட்டு முடிவில் பழைய நிர்வாக உத்தியோகத்தர்களே மீண்டும் தெரிவுசெய்யப்பட்டனர்.

### 2வது மாநாடு

கட்சியின் 2வது தேசிய மாநாடு 1953ம் ஆண்டு யாழ் நகரில் நடைபெற்றது. தலைவராக தந்தை செல்வாவும் இணைச் செயலாளர்களாக டாக்டர் பரமநாயகம் டாக்டர் நாகநாதன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

### 3வது மாநாடு

மூன்றாவது தேசிய மாநாடு 1955 சித்திரைத் திங்களில் மீண்டும் திருகோணமலையில் கூடியது. இம்மாநாட்டின் போது கட்சியின் அமைப்பு விதிகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. இதன்படி இணைச் செயலாளர்கள் இருவர் தெரிவு செய்யும் முறை மாற்றப்பட்டு, பொதுச் செயலாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். அந்த மாநாட்டில் தலைவராக திரு. வன்னியசிங்கமும், பொதுச் செயலாளராக தந்தை செல்வாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

### 4வது மாநாடு

1956-ம் ஆண்டு ஆகஸ்ட்டில் நடைபெற்ற கட்சியின் 4வது மாநாடு மிக முக்கியத்துவம் பெற்ற மாநாடாகும். திருகோணமலையில் நடைபெற்ற இம் மாநாட்டில் தமிழ் ஈழத்தின் நாலுதிசைகளிலிருந்து பல்லாயிரக்கணக்கானோர் கால் நடையாக திரண்டனர். இம் மாநாட்டிலேதான் வரலாற்றுப் பெருமை மிக்க 'திருமலைத் தீர்மானம்' எடுக்கப்பட்டது. இம்மாநாட்டில் தலைவராக திரு. வன்னியசிங்கமும் பொதுச் செயலாளராக தந்தை செல்வாவும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

### 5வது மாநாடு

மீன்பாடும்தேனாடாம் மட்டக்களப்பில் 1957ம் ஆண்டு யூலைத் திங்களில் நடைபெற்றது. பண்டா—செல்வா ஒப்பந்தத்துக்கு இந்த மாநாடு அங்கீகாரம் அளித்தது. மாநாட்டில் திரு. வன்னிய சிங்கமே மீண்டும் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். பொதுச் செயலாளர் பதவியை டாக்டர் நாகநாதன் ஏற்றார்.

### 6வது மாநாடு

1958ம் ஆண்டு 'மே' திங்களில் கட்சியின் 6வது மாநாடு நடைபெறுவதற்கு சில வாரங்களுக்கு முன்னர் பௌத்த பிக்குகளின் நெருக்கடியால் பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப் பட்டதுடன், தமிழ் ஈழத்தில் சிங்கள சிறீ எதிர்ப்பு போராட்டமும் நடைபெற்றது. இந்த மாநாட்டில் மீண்டும் தமிழுரிமைப் போராட்ட அறை கூவல் விடுக்கப்பட்டது. கட்சித் தலைவரராக திருமலை ஜோதி என். ஆர். ராஜவரோதயம் அவர்களும் பொதுச் செயலாளராக திரு. வன்னியசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். இம் மாநாட்டைத் தொடர்ந்து தென்னிலங்கையில் தமிழ — சிங்கள இலக்கலவரம மூண்டது. தமிழரசுக் கட்சியும் சுதந்திரனும் தடை செய்யப்பட்டதுடன், தமிழரசுத் தலைவர்களும் தொண்டர்களும் அவசர காலச்சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் சிறையில் தள்ளப்பட்டனர்.

### 7வது மாநாடு

கட்சியின் ஏழாவது தேசிய மாநாடு யாழ்ப்பாணத்தில் 1961 சனவரியில் நடைபெற்றது. இம்மாநாட்டில் தான் சத்தியாகிரகப் போராட்டத்திட்டம் உருவாக்கப் பட்டு, மாநாட்டையடுத்து செயல்படுத்தப்பட்டது. (1961 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் தமிழ் [illegible] முழுவதும் நடைபெற்ற சத்தியாக்கிரகம் தபால் சட்ட மறுப்பு ஆகிய போராட்டங்களையடுத்து, சிங்கள ஆட்சி ஸ்தம்பிதமடைந்ததுடன் அவசரகாலச் சட்டம் ஏவி விடப்பட்டு தமிழரசுக்கட்சியும் சுதந்திரனும், தடைசெய்யப்பட்டதுடன், சத்தியாக்கிரகத்தில் பங்குபற்றியவர்களும், சத்தியாக்கிரகத்துக்கு உதவியவர்களும் சிறைபிடிக்கப்பட்டு, தடுப்புக்காவலில் தள்ளப்பட்டனர்.) இம்மாநாட்டில் கட்சித் தலைவராக திரு. சி. மூ. இராசமாணிக்கமும், பொதுச் செயலாளராக திரு. வி. நவரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர்.

### 8-வது மாநாடு

கட்சியின் எட்டாவது தேசிய மாநாடு 1962 செப்டம்பர் திங்களில் மன்னாரில் நடைபெற்றது. இம் மாநாட்டிலேதான் மலையகத்தில் தமிழரசுக்கட்சி தனது தொழிற் சங்கத்தை ஆரம்பிக்கவேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. கட்சித்தலைவராக மீண்டும் திரு. சி. மூ. இராசமாணிக்கமும், பொதுச்செயலாளராக டாக்டர். இ. மு. வி. நாகநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

### 9-வது மாநாடு

கட்சியின் ஒன்பதாவது மாநாடு 1964ம் ஆண்டு திருகோணமலையில் நடைபெற்றது தலைவராக தந்தை செல்வா மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். கட்சியின் பொதுச் செயலாளராக திரு அ. அமிர்தலிங்கம் முதல் முறையாக தெரிவு செய்யப்பட்டார்.

### 10-வது மாநாடு

தேசிய அரசுடன் தமிழரசுக்கட்சி இணைந்திருந்த காலத்தில் — 1966ம் ஆண்டு ஜூன் மாதம கட்சியின் 10வது மாநாடு கல்முனையில் நடைபெற்றது. மாநாட்டில் அப்போதைய பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவும் கலந்துகொண்டு உரையாற்றினார். இம்மாநாட்டில் கட்சித்தலைவராக டாக்டர் இ. மு. வி. நாகநாதனும், பொதுச் செயலாளராக அ. அமிர்தலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

### 11-வது மாநாடு

கட்சியின் 11வது மாநாடு- தேசிய அரசாங்கத்தைவிட்டு தமிழரசுக்கட்சி வெளியேறிய சூட்டுடன் — உடுவில் தொகுதியில் 1969ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நடைபெற்றது. கட்சித்தலைவராகதிரு. சி. மூ. இராசமாணிக்கமும் பொதுச்செயலாளராக திரு. அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டனர்.

### 12-வது மாநாடு

தமிழினத்தின் மரண சாசனமான புதிய அரசியல் சட்டம் கொண்டுவரப்பட்டு தமிழர்களின் உரிமைகள பறிக்கப்பட்டுள்ள மிகநெருக்கடியான ஒரு கால கட்டத்தில கட்சியின் 12வது மாநில மாநாடு இந்த வாரம் (செப்டம்பா 7, 8, 9.) காங்கேசன் துறைத் தொகுதியில் கூடுகிறது. தலைமைப் பொறுப்பை இளைஞர் தலைவர் திரு. அமிர்தலிங்கம் ஏற்கிறார். இந்த மாநாட்டின சிறப்பாக—தமிழர் கூட்டணி தலைவர்கள் இதில் கலந்து கொள்ளுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழர் விடுதலைப் போரில் தூக்குமேடை ஏறவும் தயார்"

## வன்னியரின் இப்போர் முரசமே ஈழத் தமிழலின் தாரக மந்திரம்

தமிழ் மக்கள் — தம் மொழியைக் காத்திட— தம் இனத்தை இந்நாட்டில் நிலை பெறச் செய்ய — தாம் வாழும் பிரதேசங்களைக் கட்டிக் காத்திட — வடக்கும், கிழக்கும் — மலையகமும் ஒன்று சேர்த்திருக்கும் இன்று—தமிழரசுக் கட்சியும் —தமிழ் காங்கிரசும் — இ. தொ. காங்கிரசும் இணைந்து தமிழர் கூட்டணி அமைத்துச்செயல்படும் இன்று — தமிழரசுக் கட்சி தனது 12வது மாநில மாநாட்டை, தமிழரசுத் தந்தை அவதரித்த காங்கேசன்துறையில் — தமிழரசுக்கட்சியின் கால்கோள் விழாவுக்குக் காரண புருஷர்களாயிருந்த தந்தைசெல்வா — கோப்பாய் கோமான் பிறப்பிடமாக விளங்கும் காங்கேசன் துறைத் தொகுதியில் வைத்திருப்பது மிகமிகப் பொருத்தமே.

பதவிக்காகப் பாத பூசை செய்வோரும் —பாதந்தாங்கிகளும், குடைகொடி ஆலவட்டம் பிடிப்போரும் இன்று தமிழ் மக்களிடையே தாங்கள் தாம் தமிழர் தப்பட்டைகள் என்று 'தாம் தூம்' எனத்துள்ளிக் குதித்திடும் இன்று தமிழ் மக்களின் எண்ணக் கருத்தை ஆட்சியாளருக்கும், அகில உலகத்திற்கும் எடுத்துக்காட்டிட தமது பதவியைத் துறந்த பெரியவர் செல்வாவின் தொகுதியில் மாநில மாநாட்டைக் கூட்ட முடிவு செய்வோரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அத்தகையோர் — தம்மிடையே இருக்கும் புல்லுருவிகளையும், பச்சோந்திகளையும், காக்கை வன்னியர்களையும், எட்டப்பர்களையும் சிந்திக்க வைத்து தமிழுரிமைப்போராட்டத்தில் எம்முடன் சேர்த்து உரிமையை நிலை நாட்ட நல்ல திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

சத்தியாக்கிரக இயக்கத்தின் போது கட்சி வேறுபாடற்று தமிழர் அனைவரும் ஒன்றாக நின்ற நிலையை எண்ணிப்பார்க்க மனம் மகிழ்கிறது. இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய பிரமுகர்களாக இருக்கும் அத்தனை பேரும் அன்றைய சத்தியாக்கிரகத்தில் கலந்து தமிழ் உரிமைக்காகப் போர்க்கொடி பிடித்ததை எவரும் மறக்கமாட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இருபத்தைந்தாவது கிளையை யாழ்ப்பாணத்தில் திறந்து வெள்ளி விழாக் காணும் துரையப்பர் சத்தியாக்கிரகத்தின் போது உரிமை கோரும் ஊர்வலத்தில் வந்து தந்தை செல்வாவிடம் பணமுடிப் பொன்றைக் கையளித்து அவருடன் சேர்ந்து நின்று படம் பிடித்ததை இன்று எண்ணிப் பார்க்கிறேன். இத்தகையோர் இன்று எப்படித்தான் அரசுக்கு ஆலவட்டம் பிடித்தாலும் தமிழுரிமைப் போரில் நிட்சயம் பங்கெடுக்க எப்படித்தாம்முடிவு கட்டுவது.

எமது பகைவர் பற்றியோ— அரசு ஆதரவாளத் தமிழர் பற்றியோ எமக்கு எதுவித கவலையும்வேண்டியதில்லை. எமக்கு வேண்டியது தமிழுரிமையைக் காத்திட தமிழ் ஈழம் அமைத்திட நல்ல திட்டமொன்றை மாநிலமாநாடு தீட்டுவதே யாகும்.

'இன விடுதலைக்காக தம்மையே முற்றாக அர்ப்பணித்து— தமிழ்மொழிக்காகவும்—தமிழர் பிரதேசத்திற்காகவும் — அவர் தம் விடுதலைக்காகவும் நான் பேசுவது தேசத்துரோகமென ஆட்சியாளர் கருதுவார்களானால் அதனை நான் அந்தரங்க சுத்தியோடு ஒற்றுத்தூக்குக் கயிற்றில் தொங்குவதை மேலாக மதிப்பேன்' என்று பாராளுமன்றத்தில் வீர முழக்கமிட்டார் கோப்பாய்க்கோமான் வன்னியசிங்கம். அத்துடன் அவர் தமிழரசுத் தலைவராக இருந்து தலைமைப்பதவியேற்ற முதல் தலைமையுரையின் முடிவில் திருக்குறள்

### 'புத்தொளி'

ஒன்றைக் கூறித் தலைமையுரையை முடித்தது இன்றும் பசுமையாக இருக்கின்றது. இத்திருக்குறள் தமிழுரிமை கோரும் அனைவருக்கும் ஆதர்சமந்திரமாக இருக்க வேண்டும்.

துன்பமுறவரினும் செய்க
துணி வாற்றி
இன்பம்பயக்கும் வினை.

துன்பம் வந்தாலும் அதை தூசாகக் கருதி இன்பம் பயக்கும் காரியத்தைச் செய்வதே எமது கடன் என்று கூறி உயிர்நீத்த தியாகமாமலையை நாம் நினைத்துப் பார்த்து எமது விடுதலைப் போரில் வெற்றிபெறுவோமாக!

தமிழரசுக்கட்சி தனியாக நின்று நடாத்திய சத்தியாக்கிரகம் அன்று வெற்றி பெற்று யாழ் கச்சேரி நிர்வாகம் வாரக்கணக்காகத் தடைப்பட்டது. வடமாகாணத்தில் அரசாங்க நிர்வாகம் முற்றாகத்தடைப்பட்டது. இன்றே தமிழர் கூட்டணி போராட்டத்தில் இறங்கத் திட்டம் தீட்டி அதனை மாநில மாநாட்டில் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் எடுத்துச் சொல்லி விடுதலைப்பாதையில் செல்ல முடிவு செய்துள்ளது; வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் — வேறொன்றும் கொள்வாரோ?

எனவே தமிழ் தலைவர்கள் —இன்று தமிழ் இளைஞர்களையும், தமிழ் மக்களையும் தமிழுரிமைப்போராட்டத்தில் ஈடுபடுத்தத் திட்டம் பல தீட்டவேண்டும்.

தமிழ் இளைஞர்களும், தமிழ் மக்களும்— தனக்காக வாழாது ஈழம் வாழ் தமிழ் மக்களுக்காகவே தம்மை அர்ப்பணித்த—தம் உயிரை, உடைமைகளை அர்ப்பணித்த தமிழ் தலைவர்களை — அமராகிவிட்ட தலைவர்களை இம் மாநில மாநாட்டின்போது எண்ணிப்பார்த்துச் செயல்பட இன்றே, இப்பொழுதே முன்வரவேண்டும்.

## நாய்த்தமிழா! காட்டிக்கொடு!

உலகில் மிகச்சிலராக இருந்த யூதர் தமது இஸ்ரேல் அமைத்துவிட்டனர்!

உலகில் உன் இனத்திலும் தொகையிற்குறைந்தோர் தமக்கென நாடுகள் அமைத்து விட்டனர்!

ஆனல்......நீ......நீ......
நாய்......தமிழா உலகில் ஆறுகோடியாய் இருக்கிருய் ஆம்! இருக்கிருய்......வாழுகிருயா?

பிஜித்தீவில் உன் இரத்தத்தைக் கரும்பாய்க் கொடுக்கிருய்!

மலேசியாவில் இரப்பர் தோட்டத்தில் தேய்கிருய்.

அங்கு உன் தசையை உருக்கி இரப்பராய்க் கொடுக்கிருய்!

இலங்கையில் ...... அடிமை ...... நீ என்ன செய்கிருய்?டின்றில் ஒன்ருய் வாழும் நீ ...... மலையென்றும் கல்லென்றும் காடென்றும் பாராது ஓடாய்ப் போகிருய்!

இரத்தத்தைக் கசக்கிப் பிழிந்து தேயிலையாய், இரப்பராய், உணவுப் பொருளாய் உப்பாய் மீனுய்க்கொடுக்கிருய்!

இவ்வாறு அடிமைத் தொழும்பு செய்தால் மட்டும் போதுமா?

இதையும்......செய்!......
காட்டிக்கொடு!
ஆம்!

அடிமைப்பட்ட இனம் விடுதலைக்காகப் போராடும்போது அவ்வினத்தின் கோடரிக்காம்புகள் சிலதம் இனத்தைக்காட்டிக் கொடுத்துச் சுயநலம் பேணும் வழக்கம் புதியதல்ல!

குருவாகிய இயேசுவைக் காட்டிக்கொடுத்தான் சிட்ருகிய யூதாஸ்!
கட்டப் பொம்மனைக் காட்டிக் கொடுத்தான் எட்டப்பன்!

சங்கிலியனைக் காட்டிக் கொடுத்தான் காக்கை வன்னியன்!

வங்காளதேசத்தையே காட்டிக்கொடுத்தனர் பல ஆயிரம்பேர்! — அதனால் தூக்குத் தண்டனையும்பெற்றனர்அவர்கள்!

நாய்த்தமிழா நீ அஞ்சாதே! காட்டிக்கொடு

தமிழ் விடுதலை வீரர்களைக் காட்டிக்கொடு!

சிங்கள ஏகாதிபத்தியத்தினிடம் — விடுதலை விரும்பிப் போராடும் இளைஞர்களின் பெயர் பட்டியலைத் தயாரித்துக் கொடு!

தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கிளர்ச்சிக்காரர்களை பூண்டோடு களையஅவர்களைகாட்டிக் கொடு!

இவற்றிற் கெல்லாம் பரிசாக சிங்கள ஆக்கிரமிப்புக்காரர் போடும் எலும்புத் துண்டை ஏற்றுக் கொள்!

பதவி ஏதும் கிடையாதா எனப்பார்! பார்!

சிங்கள ஏஜமானின் பாதங்களை நக்கிவாழ்!

உனக்கேன்கொடி?
உனக்கேன்குடி?
உனக்கேன் கல்வி?
உனக்கேன்மதம்?
உனக்கேன் மொழி?
உனக்கேன் நாடு?

சிதறுண்டு சீரழிந்து போ!

— அளவை— குமாரன்

## நான் ஏன் இன்னும் இறக்கவில்லை!

ஓ——
நான் ஏன் இன்னும்
இருக்கிறேன்!
இறக்கவில்லை!
காலத்தின் தேவனே
என நினைவு—
உனக்கு எழவில்லையா?
எனது நண்பர்கள்
சுதந்திர புருடர்கள்
தன்னலமற்ற தியாகிகள்
தமிழ்த் தாயின்
அருங் குழவிகள்
அடிபட்டு
உதைபட்டு
வசைபட்டு
கண்ணீர் விட்டு
இரத்தம் சொரிந்து
என் தமிழ்த் தாய்க்காக
சிறையில் வாடுகையில்
நான் மட்டும்
தன் மானத்தை விற்று
இடுப்பில் துணிகட்டி
திண்ணைக்குமண்ணெடுத்து
துரோகிகளின் அடிவருடி
இன்பத்துடன்,.....
சீ......
தூ......
ஓ......
கால தேவனே
என் நினைவு
உனக்குவரவில்லையா?
நான்......
கையாலாகாதவன்
என் தமிழன்னை
பங்கப் படும் பொழுது
இதயத்துள் குமுறுவதை
விட
நான்
இறப்பது மேல்
ஓ......
நான் ஏன் இன்னும்
இருக்கிறேன்
இறக்கவில்லை!

— ஆதவன்

## திருக்கோணமலை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

"எங்கள் பகைவர் எங்கோ
மறைந்தார்
இங்குள்ளதமிழர் ஒன்றுதல்
கண்டே"

தமிழ் ஈழம் ஒன்றுபட்டு விட்டது. ஆயினும் தமிழர் இங்கு எதற்காகப் போராடுகிருர்கள். என்பதை அகில உலகும் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. உலகு என்ன அருகில் உள்ள தாயகத் தமிழர்களே தெரிந்திலர். இது எமக்குள்ள பெரும் பெலவீனம் இது களையப்படல் வேண்டும். முடிவு கண்டாக வேண்டும்.

தமிழர் பிரச்சினை உலக அரங்குகளில் பிரதிபலிப்புக்களை ஏற்படுத்த வேண்டுமாகிய இத்துறையில்தமிழ்த் தலைவர்கள் கருத்துடன் செயலாற்றல் வேண்டும். போதிய இலக்கியங்கள் தமிழில் மட்டுமல்ல அகில மொழிகளிலும் வெளிவரல் வேண்டும். வேற்று நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் இத்துறையில் சிறப்பாகப் பணியாற்றவேண்டும். காங்கேசன்துறை மாநாடு எடுக்கும் தீர்மானத்தைச் செயற்படுத்த முன், அகில உலகிலும் வாழும் தமிழ் மக்களை இத்துறையில்ஆற்றுப்படுத்த உடனடியாக தமிழ் ஈழத் தலைவர்கள் ஈடுபடல் வேண்டும். உலகப் பத்திரிகைகளில் இங்குள்ள இனப் பிரச்சினைகள் அலசப்படல் வேண்டும். எதிர்வரும் மாநாடு அதற்கும் வழிகாணட்டும்.

— உடும்பராய்த் தருமி.

## தமிழரசு ..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமலை மாநாட்டில் தீட்டிய திர்மானங்கள் நாடறியும். நாமறிவோம். மற்றவர்களை சிந்திக்கவைக்கலாம் என எண்ணினேம். அயலவர் உதவி செய்வர் எனவும் பார்த்தோம். தவணை கொடுத்தோம் தலைவர்களோடு பேசினேம். பெற்ற பலன்;- இருந்தவற்றையும் இழந்தோம். எனவே இனியும் தவணைவேண்டாம். காத்திருக்க நேரமில்லை. இலவுகாத்த கிளியாக இனியும் இருக்கமாட்டோம். இந்நிலையில் உயிரைக் கொடுத்தாவது, சிலர் மாண்டுமடிந்தாவது, எமதினத்தை வாழவைப்போம்.

### போருக்குப் புறப்படுவோம்

நீதி கேட்டுப் போராடியவர்கள் நீதி கிடைக்காமல் மடிந்த செய்தி உலக வரலாற்றிலில்லை. அதர்மம் சில நேரங்களில் வெல்லும், நீதி மடிந்துவிட்டது போலத் தோன்றும், முடிவில் நீதியே வெல்லும். கடுமையான, வாழ்க்கைச் செலவுடன் போராடுகிறேம், விவசாயப் பொருளுக்கு நியாயமான விலை இல்லை. விவசாயம்செய்வதற்கான மூலப் பொருட்களின் விலை 5 மடங்காகிவிட்டது. இந்நிலையில் இனிமேல் எப்படி வாழப் போகிறேம் பஞ்சமும் பசியும் எமக்கு நண்பர்களாக வரலாம் எனவே காத்திருப்பதில் எமக்குத்தான் இழப்பு ஏற்படும் எனவே உரிமைப் போரைச் சிறந்த முறையில் வென்றெடுப்போம்.

### வெற்றி நமதே

காந்தியின் பாதை! அது சாந்தி தருகின்ற பாதை!

இதன் வழி போராடுவோம், எமதினத்துக்கு உணவளிப்போம், உடையளிப்போம், உணர்வளிப்போம், ஆயிரமாயிரமாக களத்தில்இறங்குவோம். ஆட்சியாளர்கள் தமிழர்களை மதிப்பதற்கு வழி சமைப்போம். வாழ்வோம்,

"நாமிருக்கும் நாடு நமது
என்பது அறிந்தோம்
இது நமக்கே உரிமையாம்
என்பது அறிந்தோம்"

## 'வன்னியில் தமிழரசு'

வன்னியில் தமிழரசு எனும் தலைப்பில்—முதலாவது வெளியீடு 8-9-73ம் திகதியன்று வெளிவருகின்றது. இப் புத்தகம் காங்கேசன் துறைத் தொகுதியில் நடைபெறும் தமிழரசுக் கட்சியின் 12வது மாநில மாநாட்டில் வெளியிடப்படும்.

தமிழரசுத் தந்தை உயர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், வன்னியின் காவலன் திரு. சே. மா. செல்லத்தம்பு ஆகியோர் அட்டைப் படங்களுடன் வெளியாகும் இப்புத்தகத்தில் தமிழரசு ஆற்றிய சேவைகள் சில பிரசுரமாகிறது.

இவ் வெளியீட்டை நெடுங்கேணி வாலிப முன்னணியின் சார்பில் தமிழன்பன் திரு. த.ம. பீற்றர் பொன்கலன்ட் வெளியிடுகிருர்.

——

## ராதையின் நெஞ்சம்

'ராதையின் நெஞ்சம்' தொடர் கதையின் இறுதி அத்தியாயம் அடுத்த வார சுதந்திரனில் இடம் பெறும் வாசகர்கள் பொறுத்தருள்க

—ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தைத் தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.


## 8-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு)

லிடோ (யாழ் நகர்)



ஏ. வி. எம். ராஜன், ரவிச்சந்திரன்,
லட்சுமி, சாவித்திரி, சந்திரகலா,
சோ (இரட்டை வேடம்) மனோரமா,
ஆனந்தன்

# புகுந்த வீடு

## 233 வது தினம்

கெப்பிட்டல் (கொழும்பு)

விஜயா (பட்டுநகர்)

யோகநாயகி (வல்வெட்டித்துறை)



சிவாஜி
கணேசன்
வாணிஸ்ரீ
நடித்த
(ஈஸ்ட்மென்கலர்)

# வசந்தமாளிகை

கெயிட்டி

விடி வெள்ளி

அடுத்து

கண்ணன் வருவான்

## 2வது வாரம்

செல்லமகால்

தியாகங்கள் பலவகை!
காதலுக்காக முடிதுறந்து மன்னர்களும் தியாகம் புரிந்தனர்
ஆனால்! இவள் செய்த தியாகமோ எந்த ஒரு பெண்ணும் இழக்கத்துணியாததை அவள் தியாகம் செய்தாள் ஏன்? யாருக்காக?

வின்சர் (யாழ்ப்பாணம்) இம்பீரியல் (மட்டுநகர்)

கே. பாலசந்தரின்

# அரங்கேற்றம்

எஸ். வி. சுப்பையா
சிவகுமார்
சசிகுமார்
ஜெமினிகணேசன்



பிரமிளா
எம். என். ராஜம்
சுந்தரிபாய்
ஜெயசித்ரா

பெரியவர்களுடன் வரும் இளையவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

## 6வது ஜனத்திரள் வாரமாக காட்சியளிக்கிறது!

சென்ட்ரல் (கொழும்பு) ராணி (யாழ்ப்பாணம்) ஒடியன் (கண்டி)

சிவாஜிகணேசன், கே. ஆர். விஜயா, மனோரமா,
எம். ஆர். ஆர். வாசு, சோ, சகுந்தலா —நடித்த—
தமிழ் நாட்டில 100 நாட்கள் ஓடிய



# தவப் புதல்வன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் செப்டெம்பர் மாதம் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது